# வானவில்

# VAANAVIL

இதழ் 119 | கார்த்திகை 2020

ISSUE 119 | NOVEMBER 2020


# அமெரிக்காவின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது?




அமெரிக்காவில் இம்மாதம் (நொவம்பர்) 03ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து அங்கு அரசியல் குழப்பநிலை தோன்றியுள்ளது. அதன் காரணமாக புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி குறிப்பிட்டபடி எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி தனது ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்க முடியுமா என்ற நிச்சயமற்ற நிலை தோன்றியுள்ளது.

இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குடியரசுக் கட்சி சார்பிலும், ஜோ பைடன் (ஜனாதிபதி ஒபாமா காலத்து துணை ஜனாதிபதி) ஜனநாயகக் கட்சி சார்பிலும் போட்டியிட்டனர். அனைவரும் எதிர்பார்த்தபடியே பைடன் ட்ரம்ப்பை பெரும் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து புதிய ஜனாதிபதியாகத் தேர்வாகி இருக்கிறார். ஆனால் அவரது தெரிவை ட்ரம்ப் ஏற்க மறுத்து பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை மறுத்து வருகிறார்.

ட்ரம்ப்பின் அடாவடித்தனத்துக்கும் பிடிவாதத்துக்கும் அவர் சொல்லும் காரணம், ஜனநாயகக் கட்சியினர் தேர்தலில் மோசடிகள் செய்து தனக்கு வரவேண்டிய வாக்குகளை அபகரித்துவிட்டனர் என்பதாகும். ட்ரம்ப் இந்தக் குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்பக் கூறி வருவதுடன், பல மாநில நீதிமன்றங்களில் தேர்தல் முடிவை எதிர்த்து வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளார். ஆனால் அவரது குற்றச்சாட்டை ஆராய்ந்த தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தேர்தலின் போதோ அல்லது வாக்குகள் எண்ணப்பட்ட போதோ, அவ்வாறான முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இருந்தும் ட்ரம்ப் பதவி விலகிப் புதிய ஜனாதிபதிக்கு வழிவிடப் போவதில்லை என அடம் பிடித்து வருகின்றார். அதன் மூலம் ‘வேலியே பயிரை மேய்ந்தது போல’ பதவியில் உள்ள ஒரு ஜனாதிபதியே அமெரிக்க ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குவதுடன், சர்வாதிகாரத்தை நோக்கியும் நகர்ந்து வருகிறார். ட்ரம்ப் தேர்தலின் பின்னர் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் பதவி மாற்றங்கள் செய்து தனக்குச் சார்பானவர்களை நியமித்துள்ள விடயம் ட்ரம்பின் எதிர்காலத் திட்டங்கள் இராணுவத்தன்மையுடையனவாக இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

போதாதற்கு, ஜெர்மனியில் சர்வாதிகாரி ஹிட்லருக்கு கோயபல்ஸ் என்ற ஒரு பிரச்சார மந்திரி இருந்து வாய் திறந்தால் பொய் பேசி வந்தது போல, ட்ரம்ப்பிற்கு மைக் பொம்பியோ என்ற ஒரு இராஜாங்க அமைச்சர் இருந்து செயற்பட்டதும் அல்லாமல், எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி ட்ரம்ப் இரண்டாவது தடவையாகவும் அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பார் எனவும் கூறியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில் ட்ரம்ப்பும் அவருக்கு விசுவாசமான குழுவினரும் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து முன்னைய ஜனாதிபதிகள் செய்தது போல தமது தோல்வியை ஒப்புக்கொண்டு சமாதானமாகப் பதவி விலகிச் செல்வார்கள் எனக் கருத முடியாதுள்ளது. அதன் காரணமாக ஏற்கெனவே தேர்தல் காரணமாக ஆழமாகப் பிளவுண்டுள்ள அமெரிக்க சமூகம் மேலும் பிளவுபடும் நிலையும், சில வேளைகளில் உள்நாட்டு யுத்தம் தோன்றும் நிலையும், மக்களின் வெகுஜனக் கிளர்ச்சி உருவாகும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# நுனி நாக்கில் தேசியம், அடி நாக்கில் அதிகாரப்பசி!

"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றுபட்டு உழைப்பதற்காகவும், துறைசார் ஆலோசனைகள், நிபுணத்துவ உதவிகளை வினைத்திறன் மிக்கதாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் தமிழர் தேசிய சபை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பத்திரிகைகளுக்கு அண்மையில் தெரிவித்துள்ளார். மாவைக்கு, அவர் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்றேல்லாம் அமைப்புகள் கைவசம் இருக்கையில், மேலுமொரு புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்கித்தான் இதுவரையில் செய்ய முடியாததை சாதித்துக்காட்டப் போவதாக அவர் புலுடா விட்டுள்ளார்.

இலங்கைத்தமிழ் கட்சிகள் இவ்வாறு அதிரடியாக காலத்துக்காலம் ஏதாவதொன்றைச் சொல்வதும், பின்னர் அதனைக் கடந்து செல்வதுமாக இருந்து வருகிறார்கள் என்பது எங்களில் பெரும்பாலானோருக்கு தெரிந்ததே. எனவே மாவை கூறுவதையும் பொருட்படுத்தாமல் விடலாம். ஆனால் கடந்த ஓகஸ்ட் 5ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தோற்ற பின்னர் மாவை இப்போது வேலையெதுவுமற்ற அரசியல்வாதி. மீண்டும் அரசியலில் பேசும் பொருளாக இருப்பதற்காக இவர் போன்றவர்கள் எந்தவிதமான பிற்போக்குத்தனமான கோசங்களையும் கையில் எடுக்கக் கூடியவர்கள். இது மக்களை அழிவுப்பாதையில் கொண்டு சென்றுவிடலாம் என்பதுபற்றி மாவை போன்ற தமிழ் தேசியவாத அரசியல்வாதிகள் எந்த அக்கறையும் கொள்ளமாட்டார்கள்.

தமிழர் தேசிய சபையை உருவாக்கும் முயற்சியொன்று பற்றி ஆறு ஆண்டுகளுக்கு முன்னரும் செய்திகள் வெளிவந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். தமிழ்த்தேசிய கூட்டமைப்பை ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக மாற்றுவதற்குரிய யாப்பு ஒன்றைத் தயாரிப்பது, பலதரப்பட்ட மக்கள் அமைப்புக்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய சபையை உருவாக்குவது, வடமாகாண சபையின் செயற்பாடுகளை கட்டுக்கோப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது போன்ற தீர்மானங்கள், அப்போது த.தே.கூவின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இந்தத் தமிழர் தேசிய சபை பற்றி பேச்சுகள் எழுந்த போதெல்லாம், ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2014 ஆம் ஆண்டில் தேசிய சபை பற்றி சலசலத்தார்கள். பின்னர் ஐ.தே.க தலைமையிலான நல்லாட்சியில் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டு, மீண்டும் தொடங்கியிருக்கிறார்கள். தங்களுக்கு அரசியல் செய்ய வழியேதும் கிடைக்காத வேளைகளில் இனம், தேசியம், மொழி, மதம், பிரதேசம், சாதீயம், பால் போன்றவற்றைக் கையில் எடுத்து, அரசியல் செய்ய முனைவதில் கைதேர்ந்தவர்கள் உலகெங்கிலுமுள்ள வலதுசாரிகள்.

1989 ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட போதே, தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்த அமிர்தலிங்கத்திற்குப் பதிலாக, மாவை முதன்முதலில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதேபோலவே 1999 ஆண்டு நீலன் திருச்செல்வம் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட, அவரது இடத்திற்கு பாராளுமன்றத்தின் தேசியப்பட்டியல் உறுப்பினராக மாவை அமர்த்தப்பட்டார். அதிலிருந்து அவர் தொடர்ச்சியாக 21 வருடங்களாக பாராளுமன்றத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து வந்தார்.

பொதுவாக வலதுசாரி அரசியல் கட்சிகளின் தலைமைப் பீடத்திலுள்ளவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத் தேர்தலில் தோல்வி கண்டபிறகு, அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கில் இருப்பதில்லை. இதனை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற டொனால்ட் ட்ரம்பிடமும் காணலாம். எப்போதுமே தேர்தல் மோசடிகள் மூலம் தாங்கள் தோல்வியுற்றதாகவே உடனடியாக அறிக்கைகள் விடுவார்கள். இதற்கு மாவையும் விதிவிலக்கல்ல. தேர்தலிற்கு முன்னரும், மாவைக்கு சுமந்திரன் தரப்பினருடன் விருப்பு வாக்குகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக பூசல்கள் இருந்தன. தேர்தலின் பின்னர், விருப்பு வாக்குகளில் சுமந்திரன் மோசடி செய்துவிட்டாரென்றும், தேர்தலில் தோற்ற தனக்கு தேசியப்பட்டியல் வாயிலாகவும் பாராளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றவுடன், தமிழரசுக் கட்சிக்குள்ளும் சதி வேலை நடந்துள்ளதாகவும் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் தோற்றபோது, பாராளுமன்ற வேலைவெட்டியை இழந்தனர். இருவரும் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சியென வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும், தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாது தவித்தனர். உடனடியாக தோல்வியை கூட்டாக (கூட்டணியாக) எதிர்கொள்ள முடிவு செய்தனர். அத்தோடு தோல்வியிலிருந்து தாங்கள் மீண்டு வருவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட பிரச்சாரந்தான் தனிநாட்டுக் கோரிக்கை. இந்த ஜனரஞ்சக வெற்றுக் கோசம் வடக்கு, கிழக்கு தமிழர்களிடையே இலகுவாக எடுபட்டது. அதுவரையிலிருந்த தந்தை செல்வாவின் அகிம்சைக் கோரிக்கை தோற்றுப் போய்விட்டதாக மக்களை நம்பப்பண்ணினார்கள். இதன் விளைவு உள்நாட்டு யுத்தம், இலட்சக்கணக்கான மக்களின் உயிரிழப்பும் இடப்பெயர்வும் என, பாரிய அழிவை ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கின்றது. அதிலிருந்து மக்கள் இன்னமும் முற்றாக விடுபடவில்லை.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களில் கணிசமானோர், எப்போதுமே பிற்போக்குத் தமிழ் தேசியவாத நிலைப்பாட்டுக் கருத்தியலின் தீவிர ஆதரவாளர்களாக உள்ளனர். இவர்கள் வாழும் முதலாளித்துவ ஜனநாயக நாடுகளிலுள்ள பெரும்பாலான தேர்தல் கட்சிகளிடையே, இன–மத சார்பற்ற பரப்புரைகளே பிரதான பங்கை வகித்து வருகின்றன என்பதை இவர்களில் பலர் தெரிந்து வைத்திருந்தாலும், இலங்கை விவகாரத்தில் அதற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். அதாவது தீவிர தேசியவாதம் பேசுவோரை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கிறார்கள். புலம்பெயர் நாடுகளிலுள்ள நாடு கடந்த தமிழீழப்பிரிவினர், இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையில் தீவிரமாயிருப்போர், முன்னாள் புலிப்போராளிகள் போன்ற சக்திகளே மாவை கூறும் தமிழர் தேசிய சபையின் பிரதான இலக்கு.

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நீண்டகால இனப்பிரச்சனைக்கான தீர்வு, தமிழ், தமிழர், தமிழீழம், தேசியம் போன்ற சொற்களின் கலவையில் புதிய, புதிய அமைப்புகளை தோற்றுவிப்பதிலிருந்து ஆரம்பிப்பதல்ல. இது வெறுமனே, தமிழ் பிற்போக்கு அரசியலுக்கு புதிய கலர் அடிக்கும் வேலையேயன்றி, வேறொன்றுமல்ல.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

### தீண்டாமைக்கு எதிரான 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி ஊர்வலத்தின் 54 ஆண்டு நினைவாக:

# தீண்டாமைக்கு எதிராக திரண்டிருந்த மக்கள் மீது போலிஸ் காடைத்தனம்

## திரைமறைவு சூத்திரதாரி தமிழரசா?

(1966 ஒக்ரோபர் 21இல் சுன்னாகத்தில் ஆரம்பமான தீண்டாமைக்கு எதிரான ஊர்வலம் பின்னர் 1970 வரை வடபகுதி எங்கும் பெரும் சூறாவளி என எழுந்த ஆலயப் பிரவேச – தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களின் தொடக்கப் புள்ளியாயிற்று. 1966 ஒக்ரோபர் 21ஆம் திகதி ஊர்வலத்தின் போது என்ன நடந்தது என்ற செய்தியை அடுத்த வாரம் வெளியான 'தொழிலாளி' என்ற புரட்சிகர வாரப் பத்திரிகை ஒக்ரோபர் 27ஆம் திகதி இதழில் பிரசுரித்திருந்தது. அந்தச் செய்தியை அப்படியே கீழே தந்துள்ளோம். – வானவில்)

**சென்ற** வாரம் 21ந் தேதி வட பகுதியிலுள்ள பிரபல சந்தைப் பட்டணமான சுன்னாகம் காலையிலிருந்து ஒரே பரபரப்பாயிருந்தது. பிற்பகல் 3.30 மணிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலத்தைத் தடுக்க போலிஸ் முயன்ற பொழுது – ஊர்வலத்திற்கு தலைமை தாங்க வந்தவர்களை மிருகத்தனமாகத் தாக்கிய பொழுது சுன்னாகம் ஒரே கொந்தளிப்பு மயமாகிவிட்டது. ஊர்வலத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த போதும் வந்திருந்த மக்கள் உறுதி குலையாது யாழ்ப்பாணம் முற்றவெளியை நோக்கிப் புறப்பட்ட காட்சி உணர்ச்சிகரமான காட்சியாக இருந்தது.

யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை ஆகிய இடங்களிலுள்ள போலிஸ் அதிகாரிகளும், போலிஸ்காரர்களும் சுன்னாகத்திலும், மருதனாமடம் சந்தியிலும், தாவடிச் சந்தியிலும் துப்பாக்கி, கண்ணீர்ப்புகைக் குண்டுகள், தடிகள் பொல்லுகள், தடுப்புக் கேடயங்கள் முதலிய சகல ஆயுதபாணிகளுடன் ட்ரக்குகளிலும், ஜீப்புகளிலும் குழுமியிருந்தனர். சந்தையிலிருந்து ஐம்பது யார் தூரத்திலுள்ள சுன்னாகம் போலிஸ் நிலையத்தின் முன்னால் போலிஸ் அதிகாரிகளும் போலிஸ்காரர்களும் சகல ஆயுதபாணிகளோடும் பாய்ந்து தாக்கத் தயாராக நிற்கும் வேட்டை நாய்கள் போல் மூசிக்கொண்டு குழுமி நின்றனர்.

மறுபக்கம் சந்தைக்குள்ளும், சந்தையைச் சுற்றியுள்ள வீதிகளிலும் ஏராளமான நடுத்தர வயதினர் உட்பட பெருவாரியான இளைஞர்களும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரத் தோழர்களும், அவர்தம் அனுதாபிகளும் குழுமி நின்றனர். அவர்கள் தமது உழைக்கும் கரங்களைத் தவிர வேறு எதுவித ஆயுதமுமின்றி நிராயுதபாணிகளாய் நின்றிருந்தனர். அவர்கள் நடத்த இருந்த ஊர்வலத்தைத் தடை செய்வதற்கு எந்தவிதக் காரணமும் இருக்கவில்லை. ஊர்வலம் தடை செய்யப்படும் என்று எவரும் எதிர்பார்க்கவுமில்லை. ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக ஆயிரக்கணக்கில் வந்தவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் ஊர்வலம் தடை செய்யப்பட்டது என்ற செய்தி ஆச்சரியத்தையூட்டுவதாக இருந்தது. கொழும்பிலிருந்து கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த தோழர் சண்முகதாசன் இச்செய்தியைக் கேள்வியுற்றதும் பொலிசாரிடம் சென்று ஊர்வலம் தடை செய்யப்பட வேண்டும் என்ற அவர்களது முடிவை மாற்றத் தயாராக இல்லையென்றால் ஆயிரக்கணக்கில் குழுமியுள்ள மக்கள் யாழ். முற்றவெளி மைதானத்துக்கு நடந்து செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்குக்கூட பொலிசார் அனுமதி தர மறுத்தனர்.

ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்தவர்கள் எந்த இடையூறுகளையும் தாங்கிச் செல்லத் தயாராக இருந்தனர். சுன்னாகத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தினர் பிற்பகல் 3.30 மணியளவில் தோழர்கள் வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், டாக்டர் எஸ்.வி.சீனிவாசகம், இ.கா.சூடாமணி, கே.டானியல் உட்பட மற்றும் பல முன்னணித் தோழர்களுடன் "சாதி முறை தகர வேண்டும்", "அடக்கு முறை ஒழிய வேண்டும்" என்ற உறுதியுடன் யாழ். முற்றவெளியை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

சுன்னாகம் போலிஸ் ஸ்டேசனைக் கடந்து செல்லும்போது எந்தவித எச்சரிக்கையுமின்றி போலிசார் மக்களைத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் மிகவும் காட்டுமிராண்டித்தனமாகவும், மிருகத்தனமாகவும் தாக்கினர். தோழர்கள் வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், டாக்டர் எஸ்.வி.சீனிவாசகம், இ.கா.சூடாமணி, எஸ்.டி.நாகலிங்கம், கே.டானியல், டி.டி.பெரோரா ஆகியோரைக் கண் மூக்குத் தெரியாமல் தாக்கினர். அப்படியிருந்தும் உறுதி குலையாத மக்கள் தமது பயணத்தில் தொடர்ந்து செல்ல முற்பட்டனர். தோழர்கள் வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், இ.கா.சூடாமணி ஆகியோரைக் கைது செய்து போலிஸ் ஸ்டேசனுக்குக் கொண்டு சென்றனர். இதற்கிடையில் வெளியில் நின்ற போலிஸ் தனது மிருகத்தனமான தாக்குதலைத் தொடர்ந்தது. இதைக் கண்டு சகிக்காத சந்தையடியில் நின்ற பெண்கள் "எங்கள் பிள்ளைகளை



2 அக்டோபர் 27-ந் தேதி, வியாழக்கிழமை, 1966

தீண்டாமைக்கு எதிராக திரண்டிருந்த மக்கள் மீது

போலிஸ் காடைத்தனம்

திரைமறைவு சூத்திரதாரி தமிழரசா ?

நாசமாய்ப்போன போலிஸ் கொல்லுதே!" என்று கூக்குரலிட்டனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்களிடத்தில் ஆவேச உணர்ச்சி ஊற்றெடுத்தது. மக்களின் உறுதி குலையாத நிலையையும், அவர்களின் ஆத்திரத்தையும் கண்டுகொண்ட போலிஸ் தமது கைவரிசை பலியாது எனக் கண்டு, இருவர் மூவராகச் செல்லலாம், ஆனால் கோசமிடக்கூடாது என்று கூறி வழி விட்டனர். கூடி நின்ற மக்கள் யாழ். முற்றவெளியை நோக்கி ஆறு மைல் பயணத்தைத் தொடங்கினர்.

ஊர்வலத்திற்குத் தடை ஏன்? போலிசாரின் தாக்குதல்கள் எதற்காக? இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர் பலாத்காரம் செய்யத் தொடங்கினரா? கத்தி, கம்பு அல்லது வேறு ஏதாவது ஆயுதங்கள் வைத்திருந்தனரா? அல்லது கலகம் செய்யப் புறப்பட்டனரா? அல்லது யூ.என்.பி. ஆட்சியாளர்களும் அவர்களின் ஒத்து ஊதிகளும் வாய்ச் சவடாலடிக்கும் "ஜனநாயகத்"திற்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டனரா? இல்லை! அப்படியிருந்தும் யூ.என்.பி. ஆட்சியாளரின் இந்த அடக்குமுறை ஏன்? போலிசாரின் மிருகத்தனமான தாக்குதல் ஏன்? ஊர்வலத்திற்குத் தடை ஏன்?

எத்தனையோ மாற்றங்களும் முன்னேற்றங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூட இலங்கையில் குறிப்பாக வட பகுதியில், "தீண்டாமை" என்னும் அநாகரிகமான உழுத்துப்போன சாதிக் கொடுமை நிலவுகிறது. இந்தச் சாதிக் கொடுமையின் கீழ் ஐந்து இலட்சம் மக்கள் காலம் காலமாகச் சொல்லொணா துன்பம் அனுபவித்து வருகின்றனர். "உயர்சாதி" எனப்படுவோர் சாதாரண மனித உரிமைகளை – ஜனநாயக உரிமைகளைக்கூட வழங்க மறுத்து அவர்களை அடக்கி ஒடுக்கி வருகின்றனர். பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ள முடியாது, ஆலயங்களுக்குள் செல்ல முடியாது, உணவு விடுதிகளுக்குள்ளும் தேநீர் கடைகளுக்குள்ளும் முடிதிருத்தும் நிலையங்களுக்குள்ளும் போக முடியாது, உயர்சாதிப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் படிக்க முடியாது, பொது வைபவங்களில் சமமாக இருந்து விருந்துண்ண முடியாது, சில இடங்களில் குடியிருக்கச் சொந்தமாகக் காணி வாங்கக்கூட முடியாது, இப்படிப் பல தடைகள். இந்த அநீதியை, அக்கிரமத்தை எதிர்த்து "தாழ்த்தப்பட்ட மக்களின்" இதயம் குமுறிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தமது இதயக் குமுறலைக் காட்ட அவ்வப்போது கிளர்ச்சிகளிலும், பல்வேறு இயக்கங்களிலும் ஈடுபட்டனர். அப்போதெல்லாம் "உயர்சாதியினர" எனப்படுவோர் கொஞ்சமும் ஈவிரக்கமில்லாமல், துளியளவும் மனிதாபிமானம் இல்லாமல், நினைக்கவும் நெஞ்சம் குமுறும் கொடூரச் செயல்களால் அவர்களை அடக்கினர். வீடுகளைக் கொளுத்துவது, பொதுக்கிணறுகளில் மலத்தைப் போடுவது, சிறியவர் பெரியவர் பெண்கள் என்றும் பார்க்காது தாக்குவது, நையப்புடைப்பது, குதிகால் நரம்பை வெட்டுவது, சுட்டுக் கொல்வது போன்ற அக்கிரமத்தில் நின்று வெறியாட்டம் ஆடி "தாழ்த்தப்பட்டோரை" இம்சித்தனர்.

எனினும் ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்ச்சியை, அவர்களின் ஜனநாயக தாகத்தை, "உயர்சாதியின"ரால் அடக்க முடியவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டேயிருந்தனர். அவர்கள் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும், தமிழர் மத்தியிலுள்ள இதர 'கனவான்கள்', 'பெரிய மனிதர்கள்' ஆகியோருக்கும் தமது நிலையை விளக்கிக் கூறி அடிப்படை ஜனநாயக உரிமையை – மனித உரிமையைத் - தருமாறு திரும்பத் திரும்ப எத்தனையோ முறை கேட்டனர். ஆனால் தமிழ் மக்களின் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கி அக்கிரமம் செய்வோரின் பிரதிநிதிகளான அவர்கள் இதற்குச் செவிசாய்ப்பார்களா? அவர்கள் வாயளவில் "சாதி முறை ஒழிய வேண்டும்" என்று கூறினாலும் உண்மையில் சாதி முறையை உள்ளூர ஆதரிப்பவர்கள். சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்த இவர்கள் சுரண்டும் கருவிகளில் ஒன்றான சாதி முறையை ஒழித்துக்கட்ட ஒருபோதும் முன்வரப்போவதில்லை. எனவே அவர்கள் மழுப்பல் நியாயங்கள் கூறி வந்தனர், வருகின்றனர்.

ஆனால் ஒடுக்கப்டோரின் குரலுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி காது கொடுத்தது. உலகத்தின் எந்தப் பாகத்தினாலாயினும் சரி, எந்த மூலை முடுக்கினாலாயினும் சரி, அமுலில் இருக்கும் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராகப் போராடி வரும் மார்க்சிச – லெனினிஸ்ட்டுகளான கம்யூனிஸ்ட்டுகள் இலங்கையிலுள்ள ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவும், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை கொடுக்கவும் முன்வந்ததில் வியப்பில்லை. எனவே, "சாதி அமைப்பைத் தகரச் செய்யும்", "சமத்துவ நீதி ஓங்கச் செய்யும்" இயக்கம் நடத்த முன்வரும்படி சகல முற்போக்காளர்களுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்தது. அறைகூவல் விடுத்ததோடு நின்றுவிடாமல் அந்த இயக்கத்தைத் தொடக்கி வைக்கவும் அதை வெகுஜன இயக்கமாக வளர்க்கவும் முடிவு செய்தது.

இந்த முடிவை அமுலாக்க ஒக்டோபர் 21-ந் திகதி சுன்னாகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் நடத்தவும் யாழ். முற்றவெளியில் பெரும் கூட்டத்தை நடத்தவும் தீர்மானித்து அவற்றிற்கான சகல ஒழுங்குகளையும் செய்தது. சட்டப்படி, ஊர்வலத்திற்கும் பொதுக்கூட்டத்திற்கும் அனுமதி கோரி வேளைக்கே போலிசுக்கு விண்ணப்பித்தது. ஆனால் போலிஸ் கடைசிவரை மௌனம் சாதித்துவிட்டு 20-ம் திகதி அரைப் போயா அன்று ஒரு போலிஸ்காரர் மூலம் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி வழங்கியிருப்பதாகவும், ஆனால் ஊர்வலத்திற்குத் தடை என்றும் அறிவித்தது. இதை சில நாட்களுக்கு முன்னதாகவே அறிவித்திருந்தால் கட்சி மாற்று நடவடிக்கைகள் ஏதும் எடுக்கும் என்ற அச்சம் போலிசுக்கு. கடைசி நாளன்று அறிவித்தால் கட்சி ஒன்றும் செய்ய முடியாமல் ஊர்வலத்தை ரத்துச் செய்யும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் அந்த எண்ணத்தில் மண் விழுந்தது. ஏனெனில், "ஊர்வத்திற்குத் தடை" என்பதை அறிவிக்கக்கூட அவகாசமில்லை. எனவே, ஏற்கெனவே அறிவித்திருந்தபடி பல ஊர்களிலிருந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களும் அன்பர்களும் சுன்னாகத்தில் வந்து கூடினர்.

எண்ணியதைச் செயல்படுத்தும் திறனும் உறுதியும் கொண்ட புரட்சிகர அணியினரை எதுவும் எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்? எனவே, போலிசாரின்

தாக்குதலையும் பொருட்படுத்தாது உறுதியுடன் கூட்டம் நடக்குமிடத்தை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் மருதனாமடத்தைக் கடந்த பொழுது, போகும் வழியில் வேறும் பலரும் சேர்ந்து கொண்டதால் 1500 க்கும் அதிகமானோர் கூடிச் சென்றனர்.

சுன்னாகத்திலிருந்து யாழ். முற்றவெளி வரை 6 மைல்கள் சென்றவர்களை ஜனங்கள் வழிநெடுக நின்று பார்த்தனர். ஜீப்களிலும், ட்ரக்குகளிலும் போலிசார் சகல ஆயுதபாணிகளாக யாழ். முற்றவெளியை நோக்கிச் சென்றவர்களின் முன்னாலும் பின்னாலும் பக்கத்திலும் வந்தது ஜனங்களுக்கு வியப்பையும் திகைப்பையும் அளித்ததை அவர்களின் பார்வையிலிருந்தும், முகத்திலிருந்தும் காண முடிந்தது.

அவர்கள் யாழ். முற்றவெளியை அடைந்ததும் பலத்த மழை கொட்டத் தொடங்கியது. எனினும் கூட்டத்திற்கு வந்தவர்கள் அசையாது மைதானத்திலேயே கூடி நின்றனர். மழை விட்டதும் பெரும் திரளான மக்களுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

ஜனநாயகத்தைப் பற்றி வாய் கிழியக் கத்தும் யூ.என்.பி. ஆதரவாளர்கள் ஜனநாயக உரிமை கோரி, சமாதானமான முறையில், ஜனநாயக ரீதியில் நடைபெறும் ஊர்வலங்களுக்குத் தடை விதிப்பதும், போலிசைக் கொண்டு அடக்குமுறையை ஏவி விடுவதும் யூ.என்.பியின் ஜனநாயகம் 'ஜனநாயகம்' போலித்தனமானது என்பதையும் நன்கு அம்பலப்படுத்திவிட்டது.

**பின்னணி யார்?**

இந்த ஊர்வலத்திற்கு தடை விதிக்குமாறு பின்னணியிலிருந்து ஓதியவர்கள், யூ.என்.பியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியினர்தான் என்று தெரிய வருகிறது. தமிழரசு எம்.பி. மார் அனைவரும் இந்த ஊர்வலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு இதைத் தடுக்க திரைமறைவில் சூழ்ச்சி செய்தனர் என்பதை பரவலாக அடிபடும் பேச்சுகளிலிருந்து அறிய முடிகிறது.

மாலையில் யாழ். முற்றவெளியில் டாக்டர் எஸ்.வி.சீனிவாசகத்தின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தோழர்கள் என்.சண்முகதாசன், நீர்வை பொன்னையன், எம்.கே.அந்தனிசில், டி.டி.பெரேரா உட்பட மற்றும் பலர் பேசினர்.

**-கீரன்**

# கம்யூனிஸ்ட் கட்சி புதிய பொதுச் செயலாளரின் பேட்டி

உலகளாவிய கொவிட் – 19 என்பது நவதாராளவாத பொருளாதாரக் கொள்கையின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துகிறது, என புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

“கோவிட் – 19 காரணமாக பெரும் உயிரிழப்புகளைச் சந்தித்துள்ள சில நாடுகள் சுகாதாரத்துறையை ஒரு சேவையாக நடத்துவதற்குப் பதிலாக இலாபம் ஈட்டும் ஒரு துறையாக மாற்றிவிட்டு நவதாராளவாதம் குறித்து பிரச்சாரம் செய்து வந்துள்ளன” என ஓகஸ்ட் 30ஆம் திகதி புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஜி.வீரசிங்க ஸின்குவா செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியின்போது கூறினார்.

கலாநிதி கூறுகையில், பலமான பொதுச் சுகாதாரத்துறையைக் கொண்டுள்ள சீனா, கியூபா, இலங்கை போன்ற நாடுகள் உலகளாவிய கொவிட் – 19ஐ தடுக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் சில செல்வந்த நாடுகள் தனிப்பட்ட கொம்பனிகளுக்கு கோடிக்கணக்கான டொலர்களை அள்ளிக் கொடுத்துவிட்டு, சுமைகளை உழைக்கும் மக்கள் மீது திணித்துள்ளன. தற்போதைய ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும், நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை மட்டும் கொண்டுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நவதாராளவாதத்திற்கு எதிராகப் போராடி



**கலாநிதி ஜி.வீரசிங்க**

வருகிறது எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்,

நாம் எமது கட்சி அங்கத்தினர் தொகையை 10,000 இற்கு அண்மித்ததாகக் கொண்டு வரும் நோக்குடன் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். நாம் தொழிலாளர் இயக்கத்தில் சுறுசுறுப்பாகச் செயற்படவும், இளைஞர்கள் மத்தியில் நெருக்கமாகச் செயற்படவும் மற்றும் தொழில்வாண்மையாளர்கள் புத்திஜீவிகள் மத்தியில் அதிகமாகச் செயற்படவும் தீர்மானித்துள்ளோம்.

பெரும்பாலும் வறுமையை அடுத்த வருடம் ஒழித்துக்கட்டும் வகையில் சீனாவில் ஏற்பட்டு வரும் நிலைமைகளால் நாம் கவரப்பட்டுள்ளோம். இது முழு மனிதகுலத்தினதும் சாதனையாகும். ஒரு வளர்ச்சியடைந்த, சக்திவாய்ந்த சீனா, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது மிகச் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

1978இல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த கலாநிதி வீரசிங்க, கட்சித் தலைவர் டியு குணசேகரவால் கட்சி பொதுச் செயலாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டு, மத்திய குழுவால் ஏகமனதாக ஏற்கப்படும் வரை, கட்சியின் சர்வதேச விவகாரச் செயலராகச் செயற்பட்டு வந்துள்ளார்.

**–ஸின்குவா** (Xinhua)

# கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் குடியேற தடை விதிப்பு – அமெரிக்கா

வலதுசாரி பொருளாதார தத்துவத்தை பிரதானமாக கொண்டு இயங்கும் அமெரிக்காவுக்கும், ரஷ்யா, சீனா போன்ற இடதுசாரி நாடுகளுக்கும் இடையே பன்னெடுங்காலமாக பனிப்போர் நீடித்து வருகிறது. இதில் குறிப்பாக அண்மையில் சீனாவுக்கும் – அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தகப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு வெளியிட்டுள்ள புதிய உத்தரவில், உலகம் முழுவதும், எந்த நாட்டிலும் வாழும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அமெரிக்காவில் குடியேற தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் அல்லது பிற சர்வாதிகார கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என அமெரிக்க அரசு குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்காவின் குடியுரிமை, அரசியல் சாசனம் மற்றும் ஜனநாயக மாண்புகள் பாதுகாக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கைப் பொருளாதாரத்தின் உயிர் நாடிகள் இப்போது குற்றவாளிகளைப் போல் நடாத்தப்படுகின்றனர் - சமிலா துஷாரி

**ஆ**டைத் தொழில் இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதித் தொழில் என்று கூறப்பட்டாலும், அதன் உயிர் நாடிகள் – ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் – அரிதாகவே அங்கீகரிக்கப்படுகின்றனர். அண்மையில் மினுவாங்கொடையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் (Brandix) இருந்து வெளிவந்த கோவிட் –19 பரம்பலுடன் இன்று, அவர்கள் மேலும் பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண் ஆடைத் தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் 1984 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட Dabindu Collective அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சமிலா துஷாரி (Chamila Thushari) அவர்களின் கூற்றுப்படி, இந்த தொழிலாளர்கள் முறையான ஒருங்கிணைப்பு இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.



**கேள்வி:** முதலாவது தொற்று அறிவிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. இந்த காலகட்டத்தில் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்ன?

**பதில்:** பிராண்டிக்ஸிற்கு அப்பாலும் தொற்றுப்பரம்பல் விரிவடையத் தொடங்கியுள்ளது. ஏனைய ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கும் இந்த நோய் பரவியுள்ளதால், இப்போது ஆடைத் தொழிலாளர்கள் "மனித குண்டுகள்" போல் உள்ளனர். அவர்கள் அனைவரும் விடுதி அறைகளில் ஒன்றாக வாழ்கின்றனர், அதனால் அவர்கள் தொற்றுக்குள்ளாகுவதற்கான சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது. தங்களைத் தனிமைப் படுத்துவதை விட, அவர்கள் வேலை செய்வதற்கு அழைக்கப்படுகிறார்கள். ஊரடங்கு உத்தரவு இருந்த போதிலும், இன்னும் இந்த தொழிலாளர்கள் வேலைக்கு சமூகமளிக்க வேண்டும். இவர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்கப்படாமையினால், இவர்கள் நடந்தோ அல்லது பொதுமக்கள் போக்குவரத்து சாதனங்களையோ பயன்படுத்த வேண்டும். இந்த வழியில் எத்தனை பேர் தொற்றுக்கு ஆளாகுவார்கள்? அவர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே முகக்கவசங்கள் கொடுக்கப்பட்டுள்ளதால், அவர்களில் பெரும்பாலானோர் சொந்தமாக வாங்க வேண்டியிருந்தது. அவர்களிடம் சுத்திகரிப்பு மருந்துகள் இல்லை. நட்சத்திர ஓட்டல்களில் அதிகார நிலை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்த தொழிலாளர்கள் எந்த வசதியும் இல்லாத தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களின் அடிப்படை சம்பளம் சுமார் 14,500 ரூபாவாக இருந்தாலும், அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சம்பளம் குறைக்கப்பட்டும், அவர்களின் படிகள் மற்றும் ஊக்குவிப்பு சம்பளம் கூட அகற்றப்பட்டுள்ளன. அவர்களிடம் சேமிப்பு இல்லாமையால், காலவரையற்ற ஊரடங்கொன்று வந்தால், மொத்தமாக அத்தியாவசிய பொருட்களை வாங்கி அவற்றை சேமிக்க அவர்களிடம் நிதி இல்லை. அவர்களில் பெரும்பாலானோர், தங்களுக்கு கிடைக்கும் தினசரி படியைப் பொறுத்து, ஓரிரு காய்கறிகளை வாங்குகின்றனர்.

**கேள்வி:** PCR (Polymerase Chain Reaction) சோதனைகள் ஒழுங்கான முறையில் செய்யப்பட்டதா?

**பதில்:** PCR பரிசோதனை கூட சரியாகச் செய்யப்படவில்லை, பரிசோதனைக்காகச் சென்றவர்களில் சிலர் மறுநாள் வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனவே சோதனை செய்யப்படவில்லை என்பதால், யாராவது தொற்றுக்குள்ளாகி இருந்தாலும் கூட, அவர்களால் அறிந்திருக்க முடியாது. அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டு, தடுப்பு முகாங்களுக்கு கொண்டு செல்லுகையில், அங்கே பொது சுகாதார ஆய்வாளர்கள் எவரும் இல்லை.

**கேள்வி:** அவர்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகிறார்கள்?

**பதில்:** தம்பதெனிய, களுத்துறை மற்றும் பேராதனை ஆகிய இடங்களில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருந்தார்கள். மேலும் தங்களது பல் துலக்கும் தூரிகைகளைக்கூட அவர்களால் எடுத்துச் செல்ல முடியவில்லை. அதற்கடுத்து அவர்களின் சுகாதார தேவைகள் கவனிக்கப்பட வேண்டும். ஆனால் எல்லாமே ஒரு தற்காலிகப் பாணியில் நடக்கிறது.

**கேள்வி:** கோவிட் தொற்றின் ஆரம்பத்தில் தொழிற்சாலைகள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடித்தனவா? அத்தோடு இந்த வழிகாட்டுதல்கள் தொடர்பான விழிப்புணர்வு தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டதா?

**பதில்:** ஓம். கைகளைக் கழுவுவதற்குத் தொட்டிகள் பொருத்தப்பட்டு, உடல் வெப்பநிலைச் சோதனைகள் செய்யப்பட்டன. ஆனால் அவ்வளவுதான். தொழிற்சாலைகளுக்குள் சமூக இடைவெளி எதுவும் அங்கே இருக்கவில்லை. அவர்கள் தங்கும் விடுதிக்குச் சென்றவுடன், 10–15 தொழிலாளர்கள் ஒரு கழிப்பறையைப் பயன்படுத்துவார்கள். தொற்று நீக்கச் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. இதன் விளைவாக தங்கும் அறைகள் மற்றும்

விடுதிகளின் உரிமையாளர்கள், தற்போது அச்சத்தில் உள்ளார்கள். அத்தோடு இந்தப் பெண்கள் வீடற்றவர்களாகக் கூட போகலாம். வாடகை வசூலிக்க வரும் சில விடுதி உரிமையாளர்கள், அவர்களது வாடகை குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பற்றி கவனிப்பதில்லை.

**கேள்வி:** அவர்கள் மேலும் பாரபட்சமாக நடாத்தப்படுகின்றனரா?

**பதில்:** ஓம். கடைக்காரர்கள் கூட பொருட்களை இனிமேலும் கொடுப்பதற்குப் அஞ்சுகின்றனர்! சிலர் தங்கும் அறைகளை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. இந்த பெண்களின் தலைவிதி என்று சிலர் சொல்கிறார்கள், ஆனால் அவர்களின் விதிக்கும் கோவிட் – 19 க்கும் எந்த தொடர்பும் இல்லை. அவர்கள் தொற்றுக்குள்ளானவர்களாக சோதிக்கப்படுகையில், நாங்கள் அவர்களை உளவியல் ரீதியாக தைரியப்படுத்தி வைக்க வேண்டும். ஆனால் இதையொட்டி, அவர்கள் மனச்சோர்வடைந்து வருகின்றனர். ஒரு காலத்தில் நாட்டினுடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அழைக்கப்பட்ட பெண், இப்போது ஒரு குற்றவாளியைப் போன்று நடத்தப்படுகிறாள். இது நிறுத்தப்பட வேண்டும்!

**கேள்வி:** இந்த தொழிலாளர்களுக்கு மருத்துவ காப்பீடு இருக்கிறதா?

**பதில்:** இல்லை. மூன்றரை ஆண்டுகள் பணியாற்றிய பின், ஓய்வுதவி பெற அவர்கள் உரித்துடையவர்கள். ஆனால் மனிதவள முகவர்கள் (Manpower Agencies) ஊடாக வந்த தொழிலாளர்கள் ஐந்து ஆண்டுகளாக பணியில் இருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் ஏறத்தாள 70,000 காலியிடங்கள் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்காக இருந்தன. அவர்களுக்கு மணிக்கு 60 என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது 14 தொழிலாளர்கள் ஒரு வரிசையில் இருப்பார்கள். ஆடைத்துண்டு 14வது தொழிலாளரை அடையும் நேரத்தில் ஓர் ஆடை பூர்த்தி செய்யப்படுகின்றது. எனவே இந்த சங்கிலியில் ஏதாவது இடத்தில் தாமதம் ஏற்பட்டால், மற்ற நபர் தனது இலக்கை பூர்த்தியாக்க முடியாது. அதனால் அவர்கள் கழிவறையைப் பயன்படுத்தும் நேரத்தை குறைக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் தண்ணீரைக் கூட அருந்துவதில்லை. அவர்கள் தங்கள் தனிப்பட்ட இலக்குகளை அடைய வேண்டுமென்பதற்காக, மதிய உணவு மற்றும் தேநீர் இடைவேளைகளை தவிர்க்கிறார்கள். அதே போல் அவர்கள் மனிதத்தன்மையற்ற முறையில் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 3,000 முதல் 5,000 ரூபாய் வரை, வருகைப் படிக்கு அவர்கள் உரித்துடையவர்கள். எனவே, நோய் விடுப்பு, தற்செயல் விடுப்பு, ஆண்டு விடுப்பு போன்றன இருப்பினும், அவர்கள் வேலைக்கு சமூகளிக்க வேண்டும். அவர்களுக்கு காய்ச்சல் அல்லது வேறு எந்த நோய் இருந்தால் கூட, அவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நோய் வந்து அறையில் தங்கி இருக்கையில், சில நேரங்களில் மேற்பார்வையாளர்கள் விடுதி அறைகளுக்கு வந்து தொழிற்சாலைகளுக்கு அவர்களை அழைத்துச் செல்கிறார்கள்.

**கேள்வி:** தொழிற்சங்கங்களின் ஆதரவு எப்படி உள்ளது?

**பதில்:** குறிப்பாக பல ஆடை உற்பத்தி நிறுவனங்கள் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கையில், இப்போது தொழிற்சங்கங்களின் ஈடுபாடு குறைவாக உள்ளதே என நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். தொழிலாளர் குரல் எதுவும் இல்லை என்றால், நாங்கள் தலையிட்டு, பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தி, இந்தத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்றோம். பேரம் பேசுவதன் வாயிலாக, இந்த தொழிற்சங்கங்களும் பண ஆதாயங்களில் சிக்கிக் கொள்கின்றன. எனவே இது ஆடை உற்பத்தி நிறுவனங்களுக்கு ஒரு வெற்றிக்கு மேல் வெற்றி நிலைமை, ஆனால் இது எந்த வகையிலும் தொழிலாளர்களுக்கு சாதகமானதாக இல்லை.

**கேள்வி:** இந்தத் தொற்று நோயின் தாக்குதலின் ஆரம்பத்தில் மனிதவள தொழிலாளர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய என்ன பிரச்சினைகளை எதிர்கொண்டனர்?

**பதில்:** ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கும் குறைவாக வேலை செய்து கொண்டிருப்பவர்களின் ஒப்பந்தங்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. இதனால் ஆண்கள் குடியிருப்புகளைத் துப்பரவு செய்யும் பணிக்குச் சென்றும், பெண்கள் வீட்டு வேலைகளை செய்யவும் ஆரம்பித்துள்ளனர். அவர்கள் ஒரு நாளைக்கு 10–15 மணி நேரம் வேலை செய்தால், சுமார் 1,300 ரூபா அவர்களுக்கு கிடைக்கும். வழக்கமாக ஒரு முகவர் காலையில் அவர்களின் அடையாள அட்டைகள் மற்றும் தொலைபேசி எண்களை சேகரித்து செல்வார். பின்னர் மாலையில் திரும்பி வந்து, நாளாந்த கொடுப்பனவுகளைக் கொடுப்பார். ஆனால் இது ஒழுங்கானதொரு முறையில் நடப்பதில்லை. இவர்களில் சிலர் அடுத்த நாள் வந்து, வேலை எதுவும் கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும். அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிக்கு (Employment Provident Fund - EPF) கூட உரித்து இல்லை. சமூகம் கண்மூடித்தனமாக இருக்கும் குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளை இந்த தொழிலாளர்கள் பலர் அனுபவித்து வருகிறார்கள். செய்திகளில் ஆடைத் தொழில் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் பெண் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைப் பற்றி எவருமே வாய் திறந்து பேசுவதில்லை.

சமிலா துஷாரி அவர்களின் இப்பேட்டி ஒக்ரோபர் 20ந் திகதி (2020) டெயிலி மிரர் பத்திரிகையில் வெளிவந்தது.

**பேட்டி கண்டவர்: கமந்தி விக்கிரமசிங்க (Kamanthi Wickramasinghe)**
**தமிழில்: வானவில்**

## புறாவின் விலை 1.6 மில்லியன் யூரோ

சீன நாட்டவர் ஒருவர் பெண் புறா ஒன்றினை உலக சாதனை தொகையான 1.6 மில்லியன் யூரோவுக்கு ஏலம் எடுத்துள்ளார். இதற்கு முன்னர் கடந்த ஆண்டில் ஆண் புறா ஒன்று 1.25 மில்லியனுக்கு ஏலம்போனதே சாதனையாக இருந்தது.

நியு கிம் (New Kim) என்ற இரண்டு வயது கொண்ட இந்தப் பந்தயப் புறாவுக்கு 200 யூரோவே ஏலத்தின் ஆரம்ப விலையாக நிர்ணயிக்கப்பட்டது.

விலைபோயிருக்கும் இந்தப் புறா பல புறாப் பந்தயங்களில் வெற்றி பெற்று பெயர்பெற்றதாகும். சீனாவில் அண்மைக் காலத்தில் புறாப் பந்தயங்கள் பிரபலமடைந்து வரும் நிலையில், இரு சீன நாட்டவர்களுக்கு இடையிலான கடும் போட்டிக்குப் பின்னரே இந்தப் புறா விலை போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கொரோனா தொற்று மீண்டும் வேகமெடுப்பது ஏன்?

இலங்கையில் கொவிட் ~ 19 எனப்படும் கொரோனா தொற்றுநோய் மீண்டும் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது. அதன் காரணமாக அந்நோயால் இறப்பவர்களின் தொகையும் அதிகரித்து வருகிறது.

இந்த நோய் உலகளாவிய ரீதியில் பரவி வந்த நேரத்தில் பல நாடுகள் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறின. சுகாதாரத்துறையில் முன்னேறிய நாடுகள் எனக் கணிக்கப்படும் அமெரிக்கா, பிரான்ஸ், சுவிஸ் போன்ற மேற்கு நாடுகளில் இந்த நோயின் தாக்கமும், அதனால் ஏற்பட்ட மரணங்களும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு வேகமெடுத்தது. (அமெரிக்காவில் நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் தோல்வியடைந்ததிற்கு இந்த நோயைக் கட்டுப்படுத்தத் தவறியதும் ஒரு காரணம் எனக் கருதப்படுகிறது)

அது மாத்திரமின்றி, இலங்கையின் அயல்நாடான இந்தியாவிலும் இன்றுவரை இந்த நோய் தலைவிரித்தாடியபடி உள்ளது.

இத்தகைய நிலையில் சீனாவுக்கு அடுத்ததாக நியுசிலாந்தும் இலங்கையும்தான் இந்த நேயைக் கட்டுப்படுத்தியதாக உலக சுகாதார அமைப்பு உட்படப் பல நாடுகள் பாராட்டுத் தெரிவித்தன. (சீனாவில் இந்த நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியதற்கு அந்த நாட்டில் நிலவும் சோசலிச அமைப்புத்தான் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை)

நியுசிலாந்தும் இலங்கையும் பல வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நாடுகள். இருந்தும் அவற்றால் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடிந்தமைக்கு இரண்டு காரணிகள் அடிப்படையாகும். ஒன்று, இந்த நாடுகள் முதலாளித்துவ நாடுகளாக இருந்தபோதும், இவற்றின் அர்ப்பணிப்பும் விவேகமும் உள்ள அரச தலைமைகளாகும். மற்றது, மக்களது ஒத்துழைப்பாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை, அது பிரித்தானியர் ஆட்சியில் இருந்த காலந்தொட்டு நல்ல, சீரான சுகாதார சேவையை கொண்டுள்ள நாடாக




இருந்து வந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பிந்தைய அரசுகளும் அதைப் பின்பற்றி வந்துள்ளன. அதனால்தான் இலங்கையில் மலேரியா, அம்மை, நெருப்புக் காய்ச்சல், காச நோய் என்பனவற்றை வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிந்தது. தென்னாசியாவில் இலங்கையைத் தவிர்த்து கூடுதலான வைத்தியசாலை வசதிகள் உள்ள நாடுகள் எதுவும் கிடையாது எனத் துணிந்து கூறலாம்.

***கே.மாணிக்கவாசகர்***

இந்த நிலைமையில் நியுசிலாந்து தனது நிலையைத் தொடர்ந்து சீராக வைத்திருக்க இலங்கையில் மட்டும் நிலைமைகள் தலைகீழாக ஏன் மாறியது என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கையில் தற்போதைய கொரோனா தொற்று பரவல் மினுவாங்கொடவிலுள்ள ஆடைத் தெழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு முதலில் ஏற்பட்டு அவர்கள் மூலம் அவர்களுடன் தொடர்புள்ள பகுதிகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தியாவில் இருந்து வந்த சிலரால் தொற்று ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்படியானால் இந்தியாவில் இருந்து அங்கு வந்தவர்கள் வைத்திய பரிசோதனை எதுவும் செய்யப்படாமல் உள்ளே வர அனுமதிக்கப்பட்டார்களா என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் இப்பொழுது நாடு முழுவதும் பரவலாக இந்தத் தொற்று ஏற்பட்டுள்ளதைப் பார்க்கையில், மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள் மூலம் மட்டும் பரவியதாக அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. இது சில வேளைகளில் பலருக்கு முன்னரே ஏற்பட்டு இருந்து, ஆனால் அவர்கள் பரிசோதனைக்கு உள்ளாகாததால் இப்பொழுது பரவி வருவதாகவும் கூட இருக்கலாம்.

எது எப்படியிருப்பினும், இந்த நோய் ஏற்பட்ட முதல் கட்டத்தில் அரசாங்கம் துரிதமாகவும், கடும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமாகவும் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை மறுக்க முடியாது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பும் இருந்தது.

ஆனால் பின்னர் என்ன நடந்தது? அரசாங்கம் படிப்படியாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதுடன் மெத்தனமாகவும் இருந்தது. பொதுமக்களும் இலங்கையில் இந்த நோய் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது எனக் கருதி தமது முன்னைய வழமையான வாழ்க்கைக்குத் திரும்பினர். இங்கு ஒரு உதாரணம் சொல்லலாம். இவ்வருட நல்லூர்

கந்தசாமி கோயில் வருடாந்தத் திருவிழாவின் போது ஆகக்கூடியது முன்னூறு பேர்கள் கலந்து கொள்ளலாம் என பிரதமர் மகிந்த ராஜபக்ச அறிவித்தார். ஆனால் தேர்த்திருவிழாவின் போது கூடியிருந்த மக்கள் தொகை எத்தனை ஆயிரம்?

அது மட்டுமின்றி, திருமண, பூப்புனித, கிரகப் பிரவேச, மரண சடங்குகளின் போது மக்கள் முன்னைய வழமைப் பிரகாரம் நூற்றுக்கணக்கில் நெருக்கியடித்துக் கொண்டு கூடத் தொடங்கினர். வர்த்தக நிலையங்கள், சந்தைகள், அலுவலகங்கள், பாடசாலைகளிலும் அவ்வாறே. பேருந்துகளில் கிழங்கு அடுக்குவது போல மக்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர். இப்படிப் பலதைச் சொல்லலாம்.

கொரோனா தொற்று முற்றிலுமாகக் கட்டுப்பாட்டுக்குள் வராத ஒரு சூழலில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தவறு என அரசாங்கம் நினைத்திருக்க வேண்டும். அதேபோல, தாமும் கண்டபடி நடக்கக்கூடாது என்பதை மக்களும் உணர்ந்திருக்க வேண்டும். எனவே, தற்போதைய தொற்று அதிகரிப்புக்கு அரசாங்கமும் மக்களும்தான் காரணம்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள் இந்த தொற்றை வைத்து அரசியல் செய்வது அவர்களது பொறுப்பற்ற நிலையையும், வங்குரோத்து அரசியலையும்தான் படம் பிடித்துக் காட்டுகிறது. அரசாங்கம்தான் இந்த நோய் பரவலுக்குக் காரணம் என அவை குற்றம் சாட்டுவதும், சுகாதார அமைச்சரைப் பதவி விலகக் கோருவதும் சிறுபிள்ளைத்தனமான அரசியல் விளையாட்டுகள்.

மறுபக்கத்தில், இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆலயங்களில் பிரார்த்தனை செய்வதும், மந்திரிக்கப்பட்ட நீரை அமைச்சரே ஆறுகள் குளங்களில் ஊற்றுவதும் மற்றொரு வேடிக்கை விளையாட்டுகள்.

இந்த நோய் மேலும் பரவாதிருக்க அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எடுப்பதும், அதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதுமே இன்றைய தேவையாகும்.

**நன்றி: chakkaram.com**

# இரு தோழர்களுக்கு வானவில்லின் புரட்சிகர அஞ்சலி

## *எல்.சாந்திகுமார்*

மலையகத்தின் புரட்சிகர புத்திஜீவி ஆளுமைகளில் ஒருவரும், அரசியல் – சமூக – கலை இலக்கிய செயல்பாட்டாளர்களில் ஒருவரும், சட்டத்தரணியுமான தோழர் எல்.சாந்திகுமார் அண்மையில் திடீரெனக் காலமான செய்தி இலங்கையின் முற்போக்கு சக்திகளிடத்தில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

தோழர் சாந்திகுமார் ஏறத்தாள அரை நூற்றாண்டு காலம் மலையக மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து வாழ்ந்து அவர்களின் சமூக விடுதலைக்கான பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்.

மலையக மக்களுக்கு புதிய பாதையொன்றைக் காட்டுவதற்காக 1970களில் அமைக்கப்பட்ட மலையக மக்கள் இயக்கத்தின் உயிர்நாடியாகச் செயற்பட்டவர். மலையகத்திலிருந்து வெளிவந்த தரமான ‘தீர்த்தக்கரை’ என்ற கலை இலக்கிய சஞ்சிகையின் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

தோழர் சாந்திகுமார் அவர்களின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தவர்கள், தோழர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ‘வானவில்’ சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலையும், தோழருக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## *மகேஸ்வரன்*

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், பிற்காலத்தில் வவுனியாவை இருப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த தோழர் மகேஸ்வரன் அண்மையில் காலமான செய்தி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

தோழர் மகேஸ்வரன் 1964இல் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி உருவான காலத்திலிருந்து அதனுடன் இரண்டறக் கலந்து செயற்பட்ட ஒரு தோழராவார். அதன் வாலிப முன்னணியின் செயற்பாட்டாளராகத் திகழ்ந்த தோழர் மகேஸ்வரன், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வெகுஜன அமைப்பான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் 60களில் வட பகுதியெங்கும் முன்னெடுத்த தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச – தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தவர். அந்த நேரத்தில் உயர்சாதி வெறியர்களினதும், பொலிசாரினதும் அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்தவர்.

சாதியப்போராட்டத்துக்கு இவர் ஆற்றிய தன்னலம் மறந்த சேவை காலத்தால் மறக்க முடியாதது. மிகத் தீவிரமாகத் தன் தோழர்களோடு இயங்கிய இவர், அந்நாட்களில் தலைமறைவு வாழ்க்கைக்கும் உட்பட நேர்ந்தது. மாவிட்டபுரம் தேர் எரிப்பு வழக்கில் தீவிரமாகத் தேடப்பட்ட இவர், பின்னர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டார். எஸ்.ரி.என் நாகரத்தினம் முதலாவது எதிரியாகவும், மகேஸ்வரன் இரண்டாவது எதிரியாகவும் குற்றம் சாட்டப்பட்டு முதலில் மல்லாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். பின்னர் இவ்வழக்கு உயர் நீதிமன்றத்துக்குத் கொண்டு செல்லப்பட்டு போதிய சாட்சிகள் இல்லாமையால் இருவரும் விடுதலையாகினர்.

தனது இறுதிக்காலம் வரை தான் கொண்ட கம்யூனிசக் கொள்கைகளை விட்டு விலகாது வாழ்ந்த தோழர் மகேஸ்வரனின் இறுதி நிகழ்வுகள் வவுனியாவில் நடைபெற்றன. அவர் விரும்பியிருந்தவாறே அவரது பூதவுடலுக்கு அரிவாள் சுத்தியல் பொறித்த செங்கொடி போர்த்தப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

தோழர் மகேஸ்வரனின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் ‘வானவில்’ சார்பாக எமது துயரத்தைத் தெரிவிப்பதுடன், தோழர் மகேஸ்வரனுக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# “நான் ஒதுக்கப்பட்டு ஒரு துரோகி என்று அழைக்கப்பட்டேன்”

**- ஜுவைரியா மொஹிதீன்**

## *2020 ஆம் ஆண்டின் முன்னணி வரிசைப் பாதுகாவலர்களுக்கான வெற்றியாளர் பேசுகிறார்*



**வ**டக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் நன்கு பரிச்சயமானதொரு பெயர் ஜுவைரியா மொஹிதீன். 1990 இல் அவரது சொந்த ஊரில் இருந்து வெளியேற்றப்பட்ட ஜுவைரியா, இடம்பெயர்ந்த மக்களின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைகளை மேம்படுத்துவதற்கு உழைத்துள்ளார். அவரது அமைப்பான முஸ்லீம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளை (Muslim Women’s Development Trust - MWDT) மூலம், முஸ்லீம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (Muslim Marriage and Divorce Act - MMDA) சீர்திருத்தங்களுக்கான அரசியல் ஆதரவிற்கு ஜுவைரியா பெண்களை பாராளுமன்றத்திற்கு வழிநடத்திச் சென்றார். புத்தளத்தை தளமாகக் கொண்ட ஜுவைரியா அண்மையில், 2020 ஆம் ஆண்டுக்குரிய முன்னணி வரிசைப் பாதுகாவலர்களுக்கான ஆசிய பசுபிக் பிராந்திய விருதைப் (Front Line Defenders Asia-Pacific Regional Award) பெற்றுள்ளார்.

**கேள்வி:** *1990 ஆம் ஆண்டு வடக்கில் புலிகளால் வெளியேற்றப்பட்ட பின்னர், புத்தளம் பகுதியில் அகதிகளாக உங்கள் குடும்பம் மீள்குடியேற்றம் செய்யத் தள்ளப்பட்டது. உங்கள் வாழ்க்கையை இது எவ்வாறு பாதித்தது?*

**பதில்:** எனது 23 வது வயதில், எனது பெற்றோர், எனது பாட்டி மற்றும் எனது எட்டு உடன்பிறப்புகள் எங்கள் சொந்த ஊரான மன்னார் – எருக்கலம்பிட்டியில் இருந்து வெளியேறி, கடல் வழியாக கல்பிட்டிக்கு வந்தோம். எங்கள் ஊரிலிருந்து வெளியேறுவதற்கு, எங்களுக்கு இரண்டு நாட்கள் மட்டுமே அவகாசம் கொடுக்கப்பட்டது. நாங்கள் ஒரு மாதத்தில் திரும்பி வரலாம் என்று நாங்கள் நினைத்ததால், எங்கள் உடமைகளை விட்டுச் சென்றோம். எனினும் இதுவரைக்கும், எங்களால் திரும்பி வர முடியவில்லை. நாங்கள் அரசாங்க வேலையைக் கொண்டிருக்காதபடியால், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தங்கி நாங்கள் நிறைய போராடினோம். என் உடன் பிறந்தவர்கள் அப்போது படித்துக் கொண்டுதான் இருந்தார்கள். நானும் என் மூத்த உடன்பிறப்புகளும் வேலைகளுக்கு விண்ணப்பித்து இருந்தோம். ஆனால் அப்போது தான், எங்கள் ஊரை விட்டு வெளியேறுவதற்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் (IDP) என வாழ்ந்து பல கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தோம். பரீதாபாத்தில் ஒரு முகாமில் நான் இருந்தேன். காலையில் அங்கே தண்ணீர் இல்லாததால், முகாமில் உள்ள பெண்கள் நள்ளிரவு 1 மணியிலிருந்து 2 மணிக்கிடையில் குளிப்பார்கள். இந்த தண்ணீர் பிரச்சினை காரணமாக, வாரம் ஒரு முறை மாத்திரமே எங்களால் குளிக்க முடியும். ஒரு கடினமான காலகட்டமாக எனக்கு அது இருந்தது. ஆனால் என்னால் ஒருபோதும் மறக்க முடியாத ஓர் அனுபவமாகவும் அது இருக்கின்றது. இந்த அனுபவம் எப்படியோ இன்று நான் யார், எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கக்கூடியளவிற்கு என்னை வடிவமைத்துள்ளது.

**கேள்வி:** *ஒரு மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்ற முறையில் எப்படி உங்கள் பயணத்தை ஆரம்பித்தீர்கள், அவ்வாறு செயற்படுவதற்கு உங்களைத் தூண்டியது எது?*

**பதில்:** நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை, ஆனால் நாங்கள் நிறைய துன்பங்களை அனுபவித்தோம். இது எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று நான் உணர்ந்தேன். அடிப்படை மனித உரிமைகளுக்கான வழிவகைகளை நாங்கள் கொண்டிருக்கவில்லை. இந்த அடிப்படை உரிமைகள் இல்லாத காரணத்தால், மனித உரிமைகளுக்காகப் பேச வேண்டியதொரு தேவையை எனக்கு இது எழுப்பியது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு ஆதரவு வழங்கிடும், கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தில் (Rural Development Foundation - RDF) தொண்டாற்றுவதில் எனது பயணத்தை நான் ஆரம்பித்தேன். குறிப்பிட்ட மகளிர் சங்கங்களிலும் நான் தொண்டாற்றினேன். எனது தன்னார்வத் தொண்டாற்றப்பணிகள் மூலம், இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பல மக்கள் என்னை அறிந்து கொண்டார்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களினது குடியிருப்புகளுக்கு விஜயம் செய்த மக்கள், எப்போதும் என்னைச் சந்தித்து என்னுடன் பேசுவார்கள். நான் ஒரு தன்னார்வத் தொண்டராக இருப்பது மக்களுக்குத் தெரிந்ததால், மனித

உரிமைகள் தொடர்பான சில கூட்டங்கள் மற்றும் பட்டறைகள் பற்றி நான் அறிந்து கொள்ள வேண்டியேற்பட்டது, மேலும் என்னால் அவற்றில் கலந்து கொள்ள முடிந்தது. அவைகளில் ஒரு சிலவற்றுக்காக நான் கொழும்புக்கும் பயணித்தேன். அதனால் மனித உரிமைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் என்னால் பணியாற்ற முடிந்தது.

**கேள்வி:** முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளை நிறுவப்பட்டதின் பின்னணியில் உள்ள கதை என்ன?

**பதில்:** எனக்கு ஏறத்தாள 24 வயது அல்லது 25 வயதாக இருக்கையில், நான் முஸ்லீம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு மன்றம் (Muslim Women's Research and Action Forum - MWRAF) நடத்திய கூட்டங்களில் கலந்து கொண்டதால், முஸ்லீம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது.

பெண்கள் சங்கங்களில் நான் தொண்டாற்றுகையில் எம்.எம்.டி.ஏ (MMDA) இல் கூறப்பட்டுள்ள சமத்துவமற்ற விதிகளால் பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்தேன். ஒரு தன்னார்வத் தொண்டர் என்ற முறையில், நான் குவாஸி நீதிமன்றங்களுக்குச் (Quazi courts) சென்று, நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை பார்த்திருக்கிறேன். இது பெண்களின் உரிமைகளை நோக்கியும், குறிப்பாக கிராமப்புற மற்றும் இடம்பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை மேம்பட பாடுபட வேண்டிய அவசியத்தை எனக்கு ஏற்படுத்தியது. நான் எம்.எம்.டி.ஏ சீர்திருத்தங்களுக்காக அரசியல் ஆதரவிற்கு பாராளுமன்றத்திற்கு பெண்கள் பிரதிநிதிகளை அழைத்துச் செல்ல தன்னார்வத் தொண்டர் என்ற அனுபவம் எனக்கு உதவியதுடன், கிராம மகுதிகளின் அடிமட்ட நிலைளிலும் நாங்கள் ஆதரவு நாடினோம்.

பெண்களின் உரிமைகளுக்காக மேலும் செயற்பட வேண்டிய தேவையொன்று இருப்பதையும், ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கான வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யப்பட வேண்டும் என்பதையும் நான் உணர்ந்தேன். எனவே, 2010 ஆம் ஆண்டில் சுமார் 75 பெண்களுடன் நான் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளையை உருவாக்கினேன். ஒரு பேனை, ஒரு காகிதம் மற்றும் ஒரு மேசையுடன் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளை தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில், அச்சடிப்பதற்குக் கூட, நாங்கள் ஏறத்தாள 5 கிலோமீட்டர் பயணிக்க வேண்டும். இந்த அமைப்பை உருவாக்க உதவிய எங்களது நலம் விரும்பிகளுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். கிராமத்தில் உள்ள பெண்களுக்கு உதவ நாங்கள் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளையை ஆரம்பித்தோம். ஆனால் இன்று நாங்கள் ஒருபோதுமே கற்பனை செய்து பார்த்திராத, தேசிய அழுத்தமொன்றினை ஏற்படுத்தக் கூடியவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

**கேள்வி:** நீங்கள் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளையில் என்ன செய்கிறீர்கள்?

**பதில்:** முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளையானது அடிமட்ட நிலையில் முஸ்லீம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை வழிநடத்துவதோடு, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து தேசிய மட்டத்திலான சீர்திருத்தங்களையும் மேற்கொண்டு வருகிறது. வீட்டு துஷ்பிரயோகம் மற்றும் வன்புணர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான சட்ட உதவி வழிவகையை நாங்கள் வழங்குகிறோம். நாங்கள் அவர்களுக்கான ஆலோசனைப் பணிகளையும் வழங்குகிறோம். நாங்கள் தமிழில் ஆலோசனைகளை வழங்குவதால், சில வேளைகளில் புத்தளம் மாஜிஸ்ரேட் நீதிமன்றம் எங்களிடம் ஆட்களை அனுப்புவார்கள். தற்போது வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள இளைஞர்களிடையே சமாதானத்தைக் கட்டமைத்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தை நாங்கள் நடத்தி வருகிறோம்.

மகளிர் அமைப்புகளுள்ள பகுதியில், குறைந்த வயது திருமணம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை, முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளை நடத்தி வருகிறது. குழந்தை மணப்பெண்களுக்கு சட்ட உதவிக்கான வழிவகையையும் நாங்கள் வழங்குகின்றோம். இது தவிர, கல்வியின் முக்கியத்துவத்தை மேம்படுத்தி, குறைந்த வயது திருமணங்களை குறைக்கும் நோக்கில், ஒரு கிராமத்தில் குழந்தைகள் கழகம் ஒன்றை நாங்கள் உருவாக்கி உள்ளோம். தற்போது, நாங்கள் குறைந்த வயது திருமணங்கள் குறித்து ஓர் ஆராய்ச்சி செய்து வருகிறோம்.

**கேள்வி:** பாரபட்சமான குடும்ப சட்டங்கள் உட்பட முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு குறித்த முதல் வரிசையில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை இது எவ்வாறு பாதித்தது?

**பதில்:** இந்த விருதை வென்றது எனக்கு மிகவும் சிறப்பானதொரு தருணமாக இருந்தது. எனினும் என்னை நோக்கி பல வெறுக்கத்தக்க கருத்துக்களை நான் சமூக ஊடகங்களில் கண்டேன். இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராக நான் வேலை செய்து வருகிறேன் என்று முஸ்லிம் சமூகத்தில் உள்ள சிலர் கூறுகிறார்கள். எம்.எம்.டி.ஏ இன் சில விதிகள் காரணமாக முஸ்லீம் பெண்களால் எதிர்கொள்ளப்படும் பாகுபாடு குறித்து நான் ஒரு முறை ஊடகங்களிடம் பேசினேன். அப்போது பலர் என்னை அவமதித்து, மதத்திற்கு எதிராக நான் பேசியதாக் கூறி என்னை மிரட்டினார்கள். நான் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, துரோகி என்று அழைக்கப்பட்டேன். நான் போகும் இடமெல்லாம் பலர் என்னை அவமதித்தனர். இதனால், அலுவலகம் செல்வதும் வீடு திரும்புவதையும் தவிர, மூன்று மாதங்களாக நான் எனது வீட்டை விட்டு வெளியே வரவில்லை. எனது கணவரைத் தவிர, எனது குடும்பம் வேலையைக் கைவிடும்படி என்னிடம் கூறியதோடு, என்னால் அவர்கள் வெட்கப்படுவதாகவும் கூறினார்கள். என் கணவரும் அவமானப்படுத்தப்பட்டார். இதனால் நான் மிகவும் பாதிக்கப்பட்டேன்.

எனினும், ஒரு சில மத அறிஞர்களை நான் கலந்தாலோசித்தேன். நான் மதத்திற்கு எதிராக போகவில்லையென அவர்கள் என்னிடம் கூறினார்கள். இந்த புரிதல், என்னை ஒதுக்கியவர்களுக்கு எம்.எம்.டி.ஏ பற்றி எதுவும் தெரியாது என்ற அறிவுடன் இணைந்து எனது தலையை நிமிர்த்தி வைத்திருக்க உதவியது.

**கேள்வி:** உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எவை?

**பதில்:** அண்மையில் நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் காரணமாக, முந்தல், புத்தளத்திலுள்ள ஏராளமான மக்களுக்கு நிவாரணம் எதுவும்

வழங்கப்படவில்லை. எனவே, நாங்கள், அவர்களுக்கு உதவுவதென முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளையில் நாங்கள் தீர்மானித்தோம். இந்த பகுதியிலுள்ள மக்களின் அவலநிலையை எடுத்துக் காட்டுகின்ற ஒரு வீடியோவை எங்கள் முகநூல் பக்கம் மூலம் நாங்கள் பதிவேற்றியதால், நன்கொடைகள் கொட்டத் தொடங்கின. இப்பகுதியிலுள்ள ஏறத்தாள 2000 மக்களுக்கு எங்கள் நலம் விரும்பிகளிடமிருந்து நன்கொடைகள் மூலம் உதவ முடிந்தது. அவர்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கும் போது, இருபுறத்திலும் சிங்கள, முஸ்லிம் மக்கள் உள்ளடக்குகின்ற பக்கத்துக் கிராமங்களில், ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து அவர்களுக்கு இடையில் பகைமையைக் கொண்டிருந்ததை நான் அறிந்து கொண்டேன். இரு கிராமங்களுக்கும் நிவாரணம் வழங்கும் ஒரு முஸ்லீம் அமைப்பாக நாங்கள் இருந்ததால், கிராம மக்கள் அவர்களுக்கு இடையே உள்ள விரோதத்திற்கு பாலத்தை போட முடிந்தது. இத்தகைய சம்பவங்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி இளைஞர் செயற்பாட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும் என்ற எனது பிரச்சாரத்தை என்னை மேலும் உந்தியுள்ளன.

மேலும், முஸ்லீம் சமூகத்துடன் கொண்டிருந்த தொடர்பு போல் ஏனைய சமூகங்களுடன் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அறக்கட்டளை அதிகம் வேலை செய்யவில்லை போன்று நான் உணர்கிறேன். எனவே எதிர்காலத்தில் ஏனைய சமூகங்களுடன் இன்னும் அதிகமாக பணியாற்ற நாங்கள் ஆவலாக இருக்கிறோம். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தும் நோக்கிலும் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். என்னைப் பொறுத்தவரை, ஒவ்வொரு பெண்ணும் அடிப்படை மனித உரிமைகளுக்கான வழிவகை கிடைப்பதற்கும் பாலின பாகுபாட்டு சட்டங்கள் சீர்திருத்தப்படும் வரையிலும் நான் தொடர்ந்து வேலை செய்வேன்.

ஜுவைரியா மொஹிதீன் அவர்களின் இப்பேட்டி ஒக்ரோபர் 23ந் திகதி (2020) டெயிலி மிரர் பத்திரிகையில் வெளியானது.

**பேட்டி கண்டவர்: முகட்டாசா வாஹிட் (Muqaddasa Wahid)**

**தமிழில்: வானவில்**

# இலங்கை அணிசேராக் கொள்கையிலிருந்து விலகும் ஒவ்வொரு சமயமும் இழப்புகளைச் சந்திக்கிறது!

*-வெளிவிவகாரச் செயலாளர்*

ஒரு அணிசேரா நாடு என்ற வகையில் இலங்கை முன்னேறிச் செல்வதற்கு நடுநிலைமையான ஒரு கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே (Admiral Prof. Jeyanath Colombage) கூறியிருக்கிறார்.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ ஒக்ரோபர் 28ஆம் திகதி இலஙகை வரவிருக்கும் சமயத்தில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வெளிவிவகாரச் செயலாளர் அளித்த செவ்வியில் இவ்வாறு கூறியிருக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை உலகின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் அமைந்திருப்பதால் உலகின் பிரதான விளையாட்டுக்காரர்களான அமெரிக்கா, இந்தியா, சீனா, யப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பன இங்கு செல்வாக்குச் செலுத்த முயல்கின்றன.

பல விளையாட்டுக்காரர்கள் இலங்கையை ஒரு போராட்டக்களமாக மாற்ற விரும்புகின்றனர். நாம் அதைத் தன்னுணர்வுடன் தவிர்க்க வேண்டும்.

நாம் ஒரு அணிசேரா நாடு என்ற வகையில் தொடர்ந்தும் நடுநிலைமையாக


Admiral Prof. Jeyanath Colombage

இருக்க வேண்டும். அதிகார விளையாட்டில் இருந்து விலகியிருக்கவே நாம் விரும்புகின்றோம். அதிகார விளையாட்டில் சிக்கிக்கொள்ள நாம் விரும்பவில்லை.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையைப் பொறுத்தமட்டில் ஐந்து விடயங்கள் இருக்கின்றன. அவையாவன: தொடர்ந்தும் நடுநிலைமையாக இருத்தல், அதிகார விளையாட்டில் இருந்து தூர விலகி இருத்தல், எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணுதல், எல்லா நாடுகளுடனும் பரஸ்பரம் பொருளாதார அபிவருத்தி உறவுகளைப் பேணுதல், இந்தியாவின் மூலோபாய பாதுகாப்பு விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் என்பனவாகும்.

இந்த ஐந்து விடயங்களையும் நாம் கவனத்தில் கொள்ளாவிடின், நாம் விளையாட்டை இழந்துவிடுவோம்.

இலங்கை அணிசேரா கொள்கையிலிருந்து விலகும் ஒவ்வொரு சமயமும் உள்நாட்டுக் குழப்பங்கள் தோன்றி தனது முன்னேற்றத்தை இழந்திருக்கிறது.

இலங்கை தனது வசதிக்காக ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு எதிராக இன்னொரு குறிப்பிட்ட நாட்டை தேர்வு செய்யும் நிலையில் இல்லை.

இந்தச் சமநிலையைப் பேணுவதென்பது மிகவும் சிரமமானது. ஆனால் இதைத்தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் பொலம்பகே தனது செவ்வியில் கூறியிருக்கிறார்.

இலங்கைக் கடற்படையில் 36 ஆண்டுகள் பணியாற்றிய அட்மிரல் கொலம்பகே, அதன் 18வது தளபதியாக 2012ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவருக்கு கலாநிதிப் பட்டத்தை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவை பல்கலைக்கழகம் வழங்கியது.

# செந்தமிழ் மண்ணில் செங்கொடி இயக்கம்!




இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் தொடங்கப்பட்ட நூறாவது ஆண்டினை இந்தியா முழுவதும் கொண்டாடுவது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு மேற்கொண்டுள்ளது. 1920 அக்டோபர் 17 அன்று தாஷ்கண்ட் நகரில் முதல் கம்யூனிஸ்ட் கிளை அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சி கிளைகள் உருவாக்கப்பட்டு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பின்னணியில் தமிழ்நாட்டில் முதல் கம்யூனிஸ்ட் கட்சி கிளை 1936ம் ஆண்டு சென்னையில் துவங்கப்பட்டது. இந்த கட்சி கிளையில் பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ், ஜீவா, ஏ.எஸ்.கே. அய்யங்கார், சி.எஸ். சுப்பிரமணியம், கே. முருகேசன், நாகர்கோவில் சி.பி. இளங்கோ, டி.ஆர். சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி முருகேசன் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தார்கள். கூட்டத்தினுடைய நிகழ்ச்சிகளை எழுதிய சி.எஸ். சுப்பிரமணியம் செயலாளராக இருந்தார்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கட்சிக் கிளை உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் கொள்கையின் பால் ஈர்க்கப்பட்ட ஆர்வலர்கள் மட்டுமல்ல. 25 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அந்நிய முதலாளிகள், அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்த உள்ளூர் முதலாளிகள், கிராமங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த கந்து வட்டிக் கொடுமைக்காரர்கள், ஜமீன்தார்கள் என இவர்களை எதிர்த்து வீரஞ்செறிந்த போராட்டங்களை நடத்தி அதில் அடுக்கடுக்கான அடக்குமுறைகள், கைது, சித்ரவதைகளைச் சந்தித்த அர்ப்பணிப்பு மிக்கத் தோழர்களைக் கொண்ட கிளையாக அந்த கிளை அமைந்தது. அந்த வகையில் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கிளை உருவாக்கம் ஒரு தியாக வரலாற்றை உள்ளடக்கியதாகும்.

1917 நவம்பர் மாதம் சோவியத் நாட்டில் லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஜார் மன்னனின் ஆட்சியைத் தூக்கியெறிந்து, உழைப்பாளி மக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய மகத்தான யுகப்புரட்சியானது உலகத்தையே புரட்டிப் போட்டது. சோவியத் புரட்சியின் தாக்கம் உலகம் முழுவதும் எதிரொலித்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக பல கட்டப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த, விடுதலைப் போராட்ட வீரர்கள் மத்தியிலும் முத்திரையைப் பதித்தது.

தமிழ்நாட்டில் விடுதலைப் போரின் குரலாக விளங்கிய மகாகவி பாரதியின் சிந்தனைகளில் நவம்பர் புரட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஊடகங்கள், தொலைத்தொடர்புகள் எதுவும் இல்லாத அக்காலத்தில் மறுபக்கம், மார்க்சியம், லெனினியம், உழைப்பாளி வர்க்கம், புரட்சி இவைகளைப் பற்றியெல்லாம் அறிந்திராத நிலையில் கீழ்க்கண்டவாறு சங்கநாதம் எழுப்பினார் பாரதி:

**“மாகாளி பராசக்தி உருசியநாட்<br>டினிற்கடைக்கண் வைத்தாள், அங்கே,<br>ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி,<br>கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்,<br>இரணியன்போ லரசாண்டான்<br>கொடுங்கோலன்<br>ஜாரெனும்பே ரிசைந்த பாவி”.**

*கே.பாலகிருஷ்ணன்*
*மாநிலச் செயலாளர் - சி.பி.எம்*

புரட்சிக்குப் பின்னர் சோவியத் நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் குறித்த செய்திகள் இந்தியாவில் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதிசயமாக இருந்தது. அதே பாரதி,

**“முப்பது கோடி ஜனங்களின் சங்க<br>முழுமைக்கும் பொது உடைமை<br>ஒப்பில்லாத சமுதாயம்<br>உலகத்துக்கு ஒரு புதுமை-வாழ்க பாரத<br>சமுதாயம் வாழ்கவே”**<br>என்று பாடினார்.

### சென்னை தொழிலாளர் சங்கம்

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்பட்டார்கள். இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்பதே நியதியாக இருந்தது. கொடும் சுரண்டலுக்கு உட்பட்ட தொழிலாளர்களுக்கு நாட்டிலேயே முதல் தொழிற்சங்கம் சென்னை தொழிலாளர் சங்கம் (மெட்ராஸ் லேபர் யூனியன்) 1918ல் சென்னையில் துவக்கப்பட்டது. இச்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு தொழிலாளர் உரிமைகளுக்கு போராடுகிற பணியில் செல்வபதி செட்டியார், ராமனுஜ நாயுடு, திரு.வி.க.சிங்காரவேலர், வ.உ.சி., போன்றவர்கள் குரல் கொடுத்து வந்தனர். 1920ம் ஆண்டு பி அண்ட் சி மில்லில் வெடித்த போராட்டத்தில் இரண்டு தொழிலாளர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகினர். 1921ம் ஆண்டு ஜுன் மாதம் இதே தொழிலாளர்கள் போராட்டத்தின் மீது கண்மூடித்தனமான அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் 7 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்களை சிங்காரவேலர் தனது தோளில் சுமந்து சென்று அடக்கம் செய்தார். தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்குச் சென்று- போராடும் தொழிலாளர்களின் குடும்பங்களைச் சந்தித்து மேலும் உத்வேகமூட்டினார்.

### சிங்கார வேலர்

தோழர் ம.சிங்காரவேலர் சென்னையில் ஒரு மீனவக் குடும்பத்தில் பிறந்து வழக்கறிஞராக தொழில் புரிந்து வந்தார். லண்டன் மாநகருக்குச் சென்று அங்கு கம்யூனிச கொள்கைகளில் தொடர்புள்ளவர்களைச் சந்தித்து மார்க்சிய கொள்கைகளை புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் தொழிலாளர்களுக்கு உரிமைகள் வேண்டும் எனக் கூறி வந்த சிங்காரவேலர், முதலாளிகளின் சுரண்டல், தொழிலாளிகளின் கொடுபடாத சம்பளமே முதலாளிகளின் உபரி லாபம் என்பதையெல்லாம் புரிந்து கொண்டு தமிழகத்திற்கு வந்து மார்க்சிய கோட்பாடுகள் அடிப்படையில் தொழிலாளர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். தமிழக வரலாற்றில் கம்யூனிச லட்சியத்தை பரப்புவதில் சிங்கார வேலரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

### கயா காங்கிரஸ் மாநாட்டில்...

1922ம் ஆண்டு பீகார் மாநிலம், கயா

நகரில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் பேசிய சிங்காரவேலர், தன்னை ஒரு கம்யூனிஸ்ட் பிரதிநிதி என பகிரங்கமாக பிரகடனப்படுத்திக் கொண்டு உரையாற்றினார். கம்யூனிச லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு தனிக் கட்சியும், தனி பத்திரிகையும் வேண்டுமென விரும்பிய சிங்கார வேலர் இந்துஸ்தான் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் கட்சி என்ற கட்சியையும் அதற்கான ஒரு பத்திரிகையும் உருவாக்கினார். இதோடு மட்டுமின்றி உலகத் தொழிலாளர்களின் உரிமை தினமான மே தினத்தை நாட்டிலேயே முதன்முறையாக 1923ம் ஆண்டில் சிறப்பாக கொண்டாடினார். அதுவே, நாடு முழுவதும் உழைப்பாளிகள் தினமான மே தினத்தை கொண்டாடுவதற்கு அறைகூவல் விடுத்த தினமாக அமைந்தது.

**கான்பூர் சதி வழக்கு**

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் வேர்விடுவதை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பிய பிரிட்டிஷ் அரசு பல சதி வழக்குகளை புனைந்தது. அதில் கான்பூர் சதி வழக்கு புனையப்பட்டு 13 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். அதில் சிங்கார வேலரும் ஒருவர். இந்த வழக்கு விசாரணை முடிவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு 4 ஆண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிங்காரவேலர் கடும் உடல்நிலை பாதிப்பால் கைது செய்யப்படாமல் ஜாமீனிலேயே இருந்தார்.

உடல்நிலை ஓரளவு தேறிய பின்னர், தனது உடல்நிலை தேறிவிட்டது தன்மீதான வழக்கு விசாரணையை தொடரலாம் என கவர்னர் ஜெனரலுக்கு கடிதம் எழுதிய உடன் கான்பூர் நீதிமன்றத்தை நோக்கி பயணமானார். ஆனால் பிரிட்டிஷ் அரசு ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு விட்டதால், விசாரணை தொடர வேண்டாமென முடிவு செய்து இவர் மீதான வழக்கை தள்ளுபடி செய்ததால் வழியிலேயே சென்னைக்கு திரும்பினார்.

1925ம் ஆண்டு டிசம்பர் 26ந் தேதி கான்பூரில் கம்யூனிஸ்ட்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு சிங்காரவேலர் தலைமை ஏற்று உரையாற்றினார். அதில் சோவியத் நாட்டின் புரட்சியைப் பற்றியும், லெனின் பங்களிப்பை பற்றியும், ரஷ்யாவில் சோசலிச ஆட்சியை வலுப்படுத்த அவருடைய முயற்சி எதிர்காலத்தில் மானுட சமுதாயத்திற்கு அளப்பரிய பங்கினை ஆற்றும் எனவும் குறிப்பிட்டார்.

**ரயில்வே தொழிலாளர்கள் எழுச்சி**

முதலாம் உலக யுத்தம் முடிவுற்ற நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிலாளர்களது உரிமைகளை பறிப்பது, கடும் அடக்குமுறைகளை ஏவுவது என நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனை எதிர்த்து 1918ம் ஆண்டு ரயில்வே தொழிலாளர்களுடைய மகத்தான போராட்டம் நாடு முழுவதும் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

பொன்மலை, நாகப்பட்டினம், போத்தனூர், திருச்சி உள்பட தமிழகம் முழுவதும் வேலைநிறுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டனர். அரசின் அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு பணியாமல், நெஞ்சை நிமிர்த்திப் போராடினார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். சிங்காரவேலரும், ரயில்வே தொழிற்சங்க செயலாளரான முகுந்தலால் சர்க்கால், இந்த போராட்டத்தினை தலைமை தாங்கி நடத்தினார்கள்.

இப்போராட்டத்தையொட்டி முகுந்தலால் சர்க்கார், சிங்காரவேலர் ஆகிய 16 பேர் மீது ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்த குற்றச் சாட்டுக்கள் உள்ளிட்ட வழக்குகளை ஆங்கிலேய அரசு பதிவு செய்தது. இந்த சதி வழக்கில் 14 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், பெருமாள் என்ற தொழிலாளிக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையை இரண்டாண்டுகளாக குறைத்த உயர்நீதிமன்றம், பெருமாள் என்ற தொழிலாளிக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை குறைக்க மறுத்துவிட்டது. இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையை திருச்சி சிறையில் அனுபவித்து விட்டு சிங்காரவேலர் விடுதலையாகும் போது அவருக்கு வயது 70-ஐ தாண்டிவிட்டது.

**லயோலா கல்லூரியில் சுந்தரய்யா**

இருப்பினும், தொடர்ந்து தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், பெரியார், ஜீவா அவர்களோடு இணைந்து சமதர்ம பிரச்சாரத்தையும், பகுத்தறிவு பிரச்சாரத்தையும் தீவிரமாக மேற்கொண்டார். திருச்சி சிறையில் சிங்காரவேலர் இருக்கும் போது பம்பாயில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த ஹெச்.டி. ராஜா என்ற இளைஞரோடு தொடர்பு ஏற்பட்டது. இவர் பம்பாயிலிருந்து சென்னையில் இளைஞர்களை, மாணவர்களை கம்யூனிஸ்ட்டுகளாக்கும் பணிக்காக சென்னைக்கு வந்தவர். இவரது முன்முயற்சியில் லயோலா கல்லூரியில் மாணவர்களோடு தொடர்பு கொண்டு மார்க்சிய லட்சியங்களை விளக்கினார்.

இதன் விளைவாகவே தோழர் பி.சுந்தரய்யா, வி.கே.நரசிம்மன், சத்திய நாராயணா போன்றவர்கள் பின்னாட்களில் கம்யூனிஸ்ட்டுகளாக மாறினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் ஈர்க்கப்பட்ட பி. சுந்தரய்யா தனது படிப்பை துறந்து, 1930ம் ஆண்டு வாக்கில் தீவிரமான சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் கைது செய்யப்பட்டு இரண்டாண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டார். அப்போது அவருக்கு 18 வயது நிரம்பாததால் தஞ்சாவூரில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் திருச்சி சிறைக்கும், ராஜமகேந்திரபுரம் சிறைச்சாலைக்கும் மாற்றப்பட்டார். சிறைச்சாலையில் சுந்தரய்யா இருக்கும் போது பலரை மார்க்சியத்தின் பால் ஈர்ப்பதற்கான வகுப்புகளை நடத்தினார்.

**அமீர் ஹைதர்கான் சென்னை வருகை**

இதேகாலத்தில் பிரிட்டிஷ் அரசு முன்னணி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் 32 பேர் மீது மீரட் சதி வழக்கு என்ற வழக்கினை பதிவு செய்து பலரை கைது செய்தது. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அமீர் ஹைதர் கான் சிறுவயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி கப்பல் தொழிலாளியாக பல நாடுகளுக்கு பயணம் சென்றார். அதையொட்டி அமெரிக்காவில் அவர் தங்கியிருந்த போது பஞ்சாப் புரட்சி வீரர்களை, இந்துஸ்தான் கதார் கட்சித் தோழர்களை சந்தித்துப் பேசிய போது கம்யூனிஸ்ட்டாக மாறினார். பின்னர் இந்தியா திரும்பிய பிறகு கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுகிற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

மீரட் சதி வழக்கில் அமீர் ஹைதர் கானை பிரிட்டிஷ் அரசாங்கம் கைது செய்ய முயன்ற போது தலைமறைவாகி சென்னைக்கு வந்தார். சென்னையில் அவருக்கு அறிமுகமோ, ஆதரவோ இல்லாத சூழ்நிலையில் அவர் ஒவ்வொரு நாள் தங்குவதற்கும், ஒவ்வொரு நாள் உணவிற்கும் விவரிக்க முடியாத கஷ்டங்களை சந்தித்தார். இருப்பினும் அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு இளைஞர்களை கம்யூனிஸ்ட் கட்சியின் பால் ஈர்க்கிற பணியை மேற்கொண்டார்.

காங்கிரஸ் கட்சியின் தீவிர தொண்டர்களாக பணியாற்றிய பலரை சந்தித்து கம்யூனிஸ்ட் கட்சியின் பால் ஈர்ப்பதற்கு முயற்சித்தார். இவருடைய முன்முயற்சியினால் சத்தியநாராயண ராவும், நீதிக்கட்சியைச் சார்ந்த ராஜ வடிவேலுவும் முழுநேர ஊழியராக மாறினார்கள்.

**(அடுத்த இதழில் தொடரும்)**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

நிலையும் கூடத் தோன்றலாம்.

உலகிலேயே தங்கள் நாடுதான் உயர்தரமான நாகரீக ஜனநாயகம் உள்ள நாடு என்று பீற்றி வந்த அமெரிக்க அரசியல்வாதிகள் இப்பொழுது நடந்து கொள்ளும் முறை நாகரீக உலகையே வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது.

இலங்கை போன்ற நாடுகளை ஜனநாயக விரோத நாடுகள் என்று வர்ணித்து வந்த அமெரிக்கர்கள் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? இலங்கையில் ஜனாதிபதியை மக்களே தெரிவு செய்யும் உயர்ந்த ஜனநாயக முறை இருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் அப்படி இல்லையே? அமெரிக்காவில் மக்கள் தமது ஜனாதிபதியை நேரடியாகத் தெரிவு செய்ய முடியாதே?

அதுமட்டுமல்லாமல் இலங்கையில் 2015இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச தோற்ற நிலையில் தேர்தல் முடிவு முழுவதுமாக அறிவிக்கப்பட முன்னரே அவர் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு, தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை விட்டு வெளியேறித் தனது சொந்த ஊருக்குக் கிளம்பிச் சென்றாரே? அந்த உயர்ந்த ஜனநாயகப் பண்பு 'உலக ஜனநாயகக் காவலனான' அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் ஏன் இல்லாமல் போனது?

இன்னொருபுறம் அமெரிக்காவில் ட்ரம்ப் போய் பைடன் ஜனாதிபதியாக வந்தாலும் அமெரிக்காவின் கொள்கைகளில் பெரிய மாற்றங்கள் எதுவும் வந்துவிடப் போவதில்லை. ஏனெனில் அமெரிக்காவை உண்மையில் ஆள்வது அரசியல் கட்சிகள் அல்ல. அமெரிக்காவில் உள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய பகாசுர பல்தேசியக் கம்பனிகளே அமெரிக்காவின் உண்மையான ஆட்சியாளர்கள். அந்தக் கம்பனிகளின் கருவிகளே அரசியல் கட்சிகள்.

அந்தக் கம்பனிகளின் தேவைகள் கணக்கில் அடங்காதவை. அதாவது எண்ணெய் உட்பட உலகின் இயற்கை வளங்களைச் தங்குதடையின்றிச் சுரண்ட வேண்டும், அமெரிக்காவின் உற்பத்திகளுக்கான சந்தையாக உலக நாடுகளை மாற்ற வேண்டும், அமெரிக்காவில் உற்பத்தியாகும் ஆயுதங்களை விற்க வேண்டும், அதை விற்பதானால் உலக நாடுகளிடையே போர்கள் நடைபெற வேண்டும், இவைகளைச் சாதிப்பதற்கு உலக நாடுகளில் தமக்கு ஜால்ரா போடும் அரசுகள் இருக்க வேண்டும், தரை, கடல், ஆகாய போக்குவரத்துகள் எல்லாம் தங்குதடையின்றித் தமக்கானவையாக இருக்க வேண்டும். இப்படிப் பலப்பல.

இவைகள் பைடன் பொறுப்பேற்கும் அமெரிக்க அரசிலும் இருக்கத்தான் போகின்றன. ஆனால் ' உமியை விட சப்பட்டை கொஞ்சம் பரவாயில்லை' என்பது போல, ட்ரம்ப்பை விட பைடனிடம் அமெரிக்க மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் சில எதிர்பார்ப்புகள் இருப்பதை மறுப்பதற்கும் இல்லை.

ஏனெனில், அண்மைய அமெரிக்க வரலாற்றில் ட்ரம்ப் காலத்தில்தான் மிகவும் வலதுசாரித்தனமாகவும் எதேச்சாரத்தனமாகவும் பல கொள்கைகள் முன்னெடுக்கப் பட்டிருக்கின்றன. முன்னொரு காலத்தில் அமெரிக்காவில் மெக்கார்த்தி என்பவரால் முன்னெடுக்கப்பட்டு, 'மெக்கார்த்தி யுகம்' என வர்ணிக்கப்படும் தீவிர கம்யூனிச எதிர்ப்பு, வலதுசாரிப் போக்கு ட்ரம்ப் காலத்தில்தான் உருவாகி இருந்தது.

உள்நாட்டைப் பொறுத்தவரை ட்ரம்ப் காலத்தில்தான் அமெரிக்கா வாழ் கறுப்பு இன மக்களுக்கெதிராக அதிகமான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தென் அமெரிக்க மற்றும் முஸ்லீம் மக்களுக்கெதிரான வெறுப்புணர்வு வளர்க்கப்பட்டது. கொரோனா என்ற கொடிய நோயைக் கட்டுப்படுத்துவதை விட்டு, அமெரிக்க கொள்ளை இலாபக் கம்பனிகளுக்காக தொழிலாளர்கள் நோய்க்கு மத்தியிலும் வேலை வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

வெளிநாடுகளைப் பொறுத்தவரை, பாரீஸ் காலநிலை பற்றிய மாநாட்டிலிருந்து அமெரிக்காவை ட்ரம்ப் வெளியேற்றினார். ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்தார். வட கொரியாவுடன் வலுச்சண்டைக்குப் போனார். சீனாவுடன் வர்த்தக மற்றும் பலமுனைப் போரைத் தொடக்கினார். சீனாவுக்குரிய தென்சீனக் கடலை ஆக்கிரமிக்க முயன்றார். சீனாவுக்கு எதிராக அதன் எதிரி நாடான தாய்வானுக்கு நவீன ஆயுத விற்பனையை அதிகரித்தார். பாலஸ்தீன மக்களிடமிருந்து அபகரித்த ஜெருசலம் நகரை இஸ்ரேல் தனது புதிய தலைநகரமாக்குவதை அங்கீகரித்தார்.

கியூபா மீதும் வெனிசூலா மீதும் மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தார். ஆசிய – பசுபிக் கூட்டு என்ற பெயரில் அவுஸ்திரேலியா, யப்பான், இந்தியா என்பனவற்றைச் சேர்த்துக்கொண்டு சீனாவுக்கு எதிராக இராணுவக் கூட்டை ஏற்படுத்தினார். இந்திய – சீனா எல்லையில் மோதல்களை உருவாக்கினார். அநாவசியமான பொருள் செலவில் மெக்சிக்கோவுடனான எல்லையில் சுவர் எழுப்பத் தொடங்கினார். உலக சுகாதார அமைப்புக்கான நிதியை நிறுத்தினார். ஐ.நா. மனித உரிமைப் பேரவையிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றினார். 'நேட்டோ' அமைப்பிலிருந்தும் விலகப் போவதாக மிரட்டல் விடுத்தார். இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம் ட்ரம்ப்பின் நடவடிக்கைகளை.

இந்த அடுக்கடுக்கான முன்யோசனை அற்ற நடவடிக்கைகள் மூலம் உலக அரங்கிலிருந்து அமெரிக்காவை ட்ரம்ப் அந்நியப்படுத்தினார். அதன் மூலம் அமெரிக்க மக்களினதும் உலக நாடுகளினதும் வெறுப்பைச் சம்பாதித்தார் ட்ரம்ப். அதன் விளைவே அமெரிக்க மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்பிற்கு கொடுத்த மரண அடியும், அதற்கு உலக மக்களின் வரவேற்பும். இருந்தும் ட்ரம்ப் சட்ட விரோதமான முறையில் தொடரந்தும் வலுக்கட்டாயமாக ஜனாதிபதியாக இருந்து கொண்டு தனது அழிவு வேலைகளைத் தொடர முயற்சிக்கிறார். அதற்கு அமெரிக்க மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

மறுபக்கத்தில் ஜோ பைடனின் வெற்றி முற்றுமுழுதாக கொண்டாட்டத்துக்குரிய மக்களினதும் ஜனநாயகத்தினதும் வெற்றி அல்ல. முன்னர் குறிப்பிட்டது போல, 'உமியை விட சப்பட்டை பரவாயில்லை' என்பதே அவரது வெற்றி. அதாவது அமெரிக்க மக்களும் உலக மக்களும் ட்ரம்ப்பின் அழுங்குப் பிடியில் இருந்து தப்பி சிறிது மூச்சு விடுவதற்கான கால அவகாசத்தை பைடனின் ஆட்சிக்காலம் வழங்கக்கூடும்.

இப்பொழுது என்னவென்றால், அமெரிக்கா ஏகாதிபத்தியமாக இருந்து வருகிறதே என்ற கவலை ஒருபுறமிருக்க, அங்கு ஜனநாயகமும் இல்லாமல் போய்விட்டதே என்ற கவலை புதிதாக உருவாகி இருக்கிறது உலக மக்களுக்கு.

# ஆளும் கட்சியும் ஆவலாதிகள் சேரும் ஒரே புள்ளி!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரா மற்றும் அவரது மூன்று மெய்ப்பாது காவலர்களை 2011ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக சிறையில் இருந்துவரும் அதே கட்சியைச் சேர்ந்த துமிந்த சில்வாவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு கோரி இலங்கை நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

துமிந்த சில்வா தனக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரி விடுத்த அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு சுவாரசியமான விடயமென்னவெனில், இந்த மகஜரில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டுமின்றி, சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சி அணியைச் சேர்ந்த மனோ கணேசன் தலைமையிலான முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களும் இந்த மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட மனோ கணேசன், துமிந்த சில்வா இந்தக் குற்றத்தை இழைக்கும் போது மது போதையில் இருந்துள்ளார். இந்த இரு தரப்பு மோதலில் அவரும் காயமடைந்துள்ளார். ஏற்கெனவே அவர் 5 வருடங்களைச் சிறையில் கழித்துவிட்டார். எனவே மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலை செய்ய வேண்டும். அரசியல்வாதி என்பதற்கும் அப்பால் நான் ஒரு மனித உரிமைவாதி என்ற அடிப்படையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கிறேன் எனக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் கோரிக்கையை அவதானித்த சில மனித உரிமை அமைப்புகள், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்



மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படுவாராக இருந்தால், விசாரணையின்றி பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் உட்பட பலர் இவ்வாறு விடுவிக்கப்படுவார்களா எனக் கேள்வி எழுப்பி இருக்கின்றனர்.

இதற்கிடையில், துமிந்த சில்வாவின் விடுதலைக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கியுள்ள மனோ கணேசனின் செயல் அரசியல் உள்நோக்கம் கொண்டதா என்ற சந்தேகத்தையும் சிலர் கிளப்பியுள்ளனர். அதாவது, மனோ கணேசன் குழுவினர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கான ஒரு நகர்வா இது என அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இது போன்றதொரு நகர்வை ரவூப் ஹக்கீமின் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசும் 20ஆவது திருத்தச்சட்ட வாக்கெடுப்பின் போது மேற்கொண்டிருந்தன. அதாவது இந்தக் கட்சிகளின் தலைவர்கள் திருத்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க, உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர். தலைமையின் மறைமுக அங்கீகாரம் இன்றி இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பதே அரசியல் நோக்கர்களின் அபிப்பிராயம்.

மனோ கணேசனின் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர்கூட 20ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்திருந்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்து பட்டம் பதவி சலுகைகள் பெறும் ஆவலில் இருந்தார்கள். ஆனால் அவர்களை அரச தலைவர்கள் ஏறெடுத்தும் பார்க்காததால், 'சீ..சீ… இந்தப் பழம் புளிக்கும்' என்ற நிலையில் இருக்கிறார்கள்.

ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இந்த இனவாத முதலாளித்துவ தலைமைகள் எல்லாமே மக்களுக்கு தேர்தல் காலத்தில் ஒன்றைச் சொல்வார்கள், தேர்தல் முடிந்து தாம் எதிர்த்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமது சுயலாபம் கருதி அதனுடன் சேர்ந்து விடுவது ஆண்டாண்டு காலமாக நடந்து வரும் நடைமுறையாக இருக்கின்றது.